# காதலெனும் தேர்வெழுதி...

## 1

ஓடும் ஆற்றின்
அருகினிலே
ஓடக்காரன் இசைக்கையிலே
அந்தி வானம் கருக்கையிலே
அருகில் அமர்ந்து சொன்னாயே...
காற்றும் வானும் சாட்சியென
கைபிடித்து சத்தியமென
எடுக்கும் ஏழு பிறப்பினிலும்
நீயேயென் துணையாய்ப் பிறப்பாயென...

மனதை மயக்கும் மாலை நேரம். சூரியக் காதலன் பூமிக் காதலியை விட்டுப் பிரிய மனமில்லாமல் தயங்கி நின்று, தன் பொன்கிரணங்களை அவளுக்குப் பரிசாக அளித்துக் கொண்டிருந்தான்.

வெள்ளிக் கொலுசொலிக்க, மகிழ்ச்சியாய் ஓடும் இளம் பெண்ணாய் கொள்ளிட ஆறு ஓடிக்கொண்டிருந்தது.

பூங்காற்று பூவாசம் சுமந்து சுகந்தமாய் வீசிக் கொண்டிருந்தது. பறவைகள், பல்வேறு இனிய குரலில் இன்னிசையாய்ச் சத்தியபடி உழைத்த களைப்போடு கூடு திரும்பிக் கொண்டிருந்தன.

ரம்யமான சூழல், ரசித்து, அதில் தன்னை மறந்து செதுக்கி வைத்த சிலையாய் அமர்ந்து புத்தகம் ஒன்றில் மூழ்கியிருந்தாள்

தென்றல். படித்துறையில் அமர்ந்திருந்தவள் கால்களை ஆற்று நீர் தொட்டுத் தொட்டு மகிழ்வது போல் – நீராட்டிக் கொண்டிருந்தது. புத்தகம் படபடப்பதிலிருந்தும், அவள் பாவாடை காற்றில் சலசலப்பதிலிருந்தும் தான் அவள் உயிருள்ள பெண் என்றே உணர முடிந்தது. தொலைவிலிருந்து பார்த்தால், ஏதோ சிற்பி பார்த்துப் பார்த்துச் செதுக்கிய சிலையை மறந்து போய் படிகளில் விட்டுச் சென்றது போல் அழகாய் நேர்த்தியாய் இருந்தாள் அவள்.

அவள் அருகில் நீர் நிறைந்த குடம் ஒன்று இருந்தது. இது அவள் வழக்கம். தண்ணீர் எடுக்க வருபவள், இயற்கை சூழலில் அமர்ந்து இரண்டு மணி நேரம் ஏதாவது படித்து விட்டுத்தான் வீடு திரும்புவாள். பள்ளி நாட்களிலிருந்தே இந்தப் பழக்கம்தான். பாடங்களையும் இந்தச் சூழலில் படித்திருக்கிறாள். மனதுக்குப் பிடித்த சூழலில் படிக்கும்போது, பாடம் மனதில் கலபமாய் ஏறும். கல்லூரி முடித்த பின்பும் இந்தப் பழக்கம் விடவில்லை. நல்ல கதைகள், பொதுஅறிவு நூல்கள், சான்றோர் வாழ்க்கை வரலாறு, சரித்திர ஆராய்ச்சி நூல்கள் என்று தேடித் தேடி நூலகத்திலிருந்து எடுத்து வந்து படிப்பாள்.

''என்னம்மா, வீட்ல உட்கார்ந்து படிக்கக் கூடாதோ? தோட்டமில்லையா,. மொட்டைமாடி இல்லையா? இப்படி படித்துறையில உட்கார்ந்து வயசுப் பொண்ணு படிக்கறதா?'' வீட்டில் பாட்டிதான் சமயத்தில் புலம்புவார்.

''வீட்ல ஆறு இல்லையே பாட்டி''

''அது சரி. நீ உட்கார்ந்து படிக்கற நேரத்துல, உங்கக்கா வேனில் மூணு குடம் தண்ணி கொண்டு வந்து, வீட்டு வேலையும் முடிக்கறா.''

அக்கா இளவேனிலுக்கு தங்கையை யாரும் எதுவும் சொன்னால் பிடிக்காது.



''என் பாட்டி அவளைச் சும்மா ஏதாவது சொல்றீங்க? படிக்கறது நல்ல விஷயம் தானே? இந்த வயசுல படிக்காம எப்ப படிக்கப்போறா?

ஏதோ அம்மாவுக்கு நான் உதவி செஞ்சுடறேன். அவ வானம்பாடியா சுத்தித் திரியட்டுமே. நம்ம வீட்லயிருந்து கூப்பிடு தூரம் படித்துரை. விளக்கு வைக்கறதுக்குள்ளே திரும்பிடறா. பிறகென்ன?''

தங்கையை விட்டுக் கொடுக்காமல் பேசும் அக்காவை அதிசயமாய்ப் பார்த்து முகவாயில் கை வைத்து நிற்பார் பாட்டி.

''இல்லடியம்மா உன் அருமைத் தங்கையை நான் ஒண்ணும் சொல்லலை. போதுமா?''

பாட்டி விளையாட்டாய் அபிநயிக்க, பேத்திகள் சிரிப்பார்கள்.

அது அன்பால் பின்னிப் பிணைந்த வீடு. அப்பா நமசிவாயம் கிராமத்துப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். காடு கழனி வீடு நிலம் என்று சின்ன ஜமீன்தாராய் வளைய வரக்கூடிய செல்வம் இருந்தும், தமிழ் மேல் கொண்ட காதலால் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றார். 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற தமிழுரைக்கு ஏற்ப, தமிழின்பம் அந்த கிராமம் முழுதும் பரவ, இளைய தலைமுறை தமிழ் படிக்க வேண்டும் என்று நம்பினார்.

அதுவரை அந்த கிராமத்தில் சரியாக பள்ளிக்கூடம் என்று ஒன்று இல்லை. தன் சொந்தக் கட்டிடம் ஒன்றைப் பள்ளிக்காக வழங்கி, பஞ்சாயத்து மூலம் அங்கே அரசு பள்ளிக்கூடம் நிறுவ ஏற்பாடு செய்தார். அவரே அங்கு தமிழாசிரியராய் நியமனம் பெற்றார்.

''பள்ளிக்கூடம் கட்டி, நூறு பேருக்கு வேலை கொடுக்க வசதி இருந்தும், நீ இப்படி கைகட்டி நின்னு சம்பளம் வாங்கறியேடா, சிவா'' அம்மா புலம்பலுக்கு சிரித்துக் கொள்வார்.

''காடு கழனியெல்லாம் அப்பா அண்ணன்னு எல்லோரும் கவனிக்கறாங்க. நான் என்னம்மா செய்யறேன். அப்படியே எனக்குப் பொறுப்பு வழக்கப்பட்டாலும், நானே நோா வயல்ல இறங்கி வேலை செய்யப் போறேனா? இல்லையே. மேற்பார்வை தானே. பள்ளிநேரம் போக மீதி நேரம் செய்யறேன். போதுமா? தமிழை போதிக்கற அந்த இனிய கணங்களை என் வாழ்வில் எதற்காகவும் நான் இழக்க மாட்டேன்மா.''

அவர், அந்த அளவு தமிழ் மேல் பற்று கொண்டவர். அவர் அப்பா காலத்திற்குப் பின் பாகம் பிரிக்கப்பட்டு அவருக்குக் கிடைத்த வீட்டிற்குக் கூட 'தேன் தமிழ்க்குடில்' என்று தான் பெயரிட்டார். திருமணத்திற்குப் பின் மனைவியிடம் ஆசையாய்ச் சொன்னார்.

''எனக்கு நிறைய குழந்தைகள் வேணும். மதுரம். அதுவும் பெண் குழந்தைகள். இளவேனில், தென்றல்னு தமிழ்ப் பேரைத் தான் வைப்பேன். சொல்லும்போதே ஜில்லுனு இல்ல? என்ன குளுமை, என்ன இனிமை! உன் பேர் மதுரமா இனிக்கறா மாதிரி, இது குளுமை.''

சொன்னது போலவே இரண்டு பெண்கள் பிறக்க, இளவேனில், தென்றல் என்றுதான் பெயரிட்டார். பெண்களும் பெயருக்கு எற்ப குணத்தில் குளுமையாகத் தான் இருந்தார்கள். படிப்பு, பாட்டு, குணம் என்று எல்லாவிதத்திலும் முதன்மையாய்த் திகழ்ந்தார்கள்.

அம்மா மதுரம் நல்ல தமிழ் பாடல்களைப் பாடுவதில் தேர்ந்தவர். வீட்டில் சதா இனிய குரலில் தேவாரம் திருப்புகழ் என்று அவர் பாட, இசையும் தெய்வீக மணமும் தமிழும் கலந்து வீடே சின்ன சொர்க்கமாய்த் திகழ்ந்தது.

வீட்டைச் சுற்றி நல்ல வாசமுள்ள மலர்கள் உள்ள தோட்டம் இருந்தது. ஒரு கிரவுண்ட் அளவு பரந்து விரிந்திருந்தது தோட்டம். மல்லி, முல்லை, பிச்சி, பன்னீர் பூ, பவளமல்லி என்று வாசனை



ஆளைத் தூக்கும். தோட்டத்தின் பூஜைக்காக செம்பருத்தி, நெட்டிலிங்கம், சாமந்தி என்று ஒரு பக்கம். கீரை வகைகள், மிளகாய், தக்காளி, வெண்டை, கத்திரி, பாகை, புடலை என்று காய்கறி வகைகள் ஒரு பக்கம். இவற்றால் வாசமும் பசுமையும் குளுமையுமாய் வீடு இருந்தது. ஆரோக்யமாய் இருந்தது.

நல்ல விளைநிலைத்தில் தான் பயிர்கள் செழித்து வளரும். பாலையில் கள்ளியும் முட்செடிகளும் தானே வளரும்.

சரியான சூழலில் நல்ல தாய் தந்தையருக்குப் பிறந்த இளவேனிலும் தென்றலும் நல்ல பயிர்களாய்ச் செழித்தார்கள். செடிகளை வேறு நல்ல விளைநிலம் பார்த்து நடவேண்டிய காலமும் பொறுப்பும் அந்த பெற்றோருக்கு இருக்க, இளவேனிலுக்கு அந்த கிராமத்திலேயே வீடும் நிலமுமாய் வாழும் தியாகுவிற்கு மணம் பேசியிருக்கிறார்கள். எம்.எஸ்ஸி படித்தவன். விவசாயப் படிப்பு. நல்ல இடத்தில் சம்பந்தம் பேசிய திருப்தியோடு, இதே போல் நல்ல வரன் இளைய மகளுக்கும் அமைய வேண்டுமே என்ற கவலைதான் மதுரத்திற்கு.

அந்தக் கவலையெல்லாம் புரியும் வயதா தென்றலுக்கு? படிப்பு, பாட்டு என்று சிட்டுக் குருவியாய் சிறகடித்தாள்.

''நம்ம வீட்ல இருக்கற வரைதானே இந்த சுதந்திரம். பாவம், அனுபவிக்கட்டும், மதுரம்'' என்பார் வாஞ்சையாய் நமசிவாயம்.

இந்த அன்பும் சுதந்திரமும் தான் தென்றல் நிறைய படிக்க உதவுகிறது...

இப்போதுகூட இரண்டாம் முறையாய் பொன்னியின் செல்வனில் ஐக்கியமாகி விட்டாள். நேரம் போவதே தெரியாமல் படித்துக் கொண்டிருந்தவள், எழுத்து தெரியாத அளவு சூரியன் மறைந்து இருள் சூழ்ந்தவுடன்தான் சட்டென்று உரைக்க, தலை நிமிர்ந்தாள். வழக்கம்போல் ஆற்றில் ஆட்டம் போடும் சிறுவர்களோ, தண்ணீர் எடுக்க வரும் பெண்களோ இல்லாமல் ஆற்றங்

கரை வெறிச்சோடி இருந்தது. நேரத்திற்கு திரும்பினாலே பாட்டி சற்று பதத்துப் போய் திட்டுவது வழக்கம். இன்று என்ன இப்படிப் படிப்பிலே ஆழ்ந்து விட்டோம் என்று தன்னையே நொந்தபடி அவசரமாய் எழுந்தாள். குடத்தை இடுப்பில் ஏற்றி மறுகையால் புத்தகத்தைப் பற்றியபடி வேகமாக நடந்தாள்.

சீக்கிரம் வீட்டுக்குப் போகவேண்டுமே என்ற கவலையில், எதிரே வந்த பைக்கை கவனிக்காமல், குறுக்கே போக, அந்த வேகத்திலும் சற்று திரும்பி கிரீச்சிட்டு பிரேக் பிடித்து நின்றது பைக். நின்ற வேகத்தில் லேசாய் அதன் முன் சக்கரம் அவளைத் தாக்க, தடுமாறி விழுந்தாள் தென்றல்.

## 2

எங்கேடி தொலைந்து போனாய்?

நானென்ன வாமனனா;

ஓரடியில் உலகளக்க?

நானென்ன கிருஷ்ணனா;

வாய்க்குள்ளே உலகைக் காட்ட?

உலகில் எங்கேயடி
உன்னைத் தேடுவேன்?
முற்பிறவிக் காதலியே
என்னுயிர் தேவதையே
எங்கேயடி தொலைந்து போனாய்.

ரவிச்சந்திரன் பெட்டியில் துணிமணிகளை அடுக்கிக் கொண்டிருந்தான். துணிகளை விட புத்தகங்கள் நிறைய இருந்தன. அவன் பொறுமையாய் அடுக்கத் துவங்க, அம்மா வந்தாள்.

"இது பருப்புப் பொடி, இது எலுமிச்சங்காய் ஊறுகாய். இது..."



அம்மா சுந்தரி அடுக்க, அவன் ஆயாசமாய் திரும்பினான்.

"அம்மா, நான் என்ன வனாந்திரத்துக்காப் போறேன்? என் நண்பன் வீட்ல தானே தங்கப் போறேன். இதெல்லாம் எதுக்கு?

எல்லாம் சரிடா. சூழ்நிலையப் பார்த்துக்கிட்டுத் தானே தங்குவேன்னு சொன்னே. ஒரு வேளை ஹோட்டல்ல தங்க நேர்ந்தா, இதை நீ பயன்படுத்திக்க, நண்பன் வீட்ல தங்கினா, அவங்களுக்கு இதைக் கொடுத்திடு.".

"சரி, எப்படியும் விடமாட்டே. அப்படிவை. எடுத்து வச்சுக் கறேன்."

அப்பா வேணு மெல்ல வந்து எட்டிப் பார்த்தார்.

"என்னப்பா?"

மெல்ல வந்து கட்டிலின் நுனியில் அமர்ந்து கொண்டார். அருகே பெட்டி வாய் பிளந்து கிடந்தது. படுக்கையில் துணி மணிகள், புத்தகங்கள், கேசட்டுகள் என்று சிதறிக் கிடந்தன. அவற்றை ஒழுங்குபடுத்தி அடுக்கும் மகனைப் பெருமையாய்ப் பார்த்தார். கைவேலையை விட்டுவிட்டு அப்பாவின் அருகே வந்து உட்கார்ந்து கொண்டான் ரவிச்சந்திரன்.

ஏதோ சொல்ல வந்து தயங்குகிறார் என்பதைப் புரிந்து கொண்டான் மென்மையாய், "என்கிட்ட என்னப்பா தயக்கம்? என்ன சொல்லணுமோ தயங்காம சொல்லுங்களேன்."

"ஐ.ஏ.எஸ். பரீட்சையில தேறிட்ட. இன்னும் இன்டர்வியூ தான் பாக்கி..."

"ம்"

"அதிலும் நீ நிச்சயம் ஜெயிச்சுடுவே. ஐ.ஏ.எஸ்.ரிட்டன் டெஸ்ட்ல எல்லோருக்கும் முன்னாடியே உனக்கு இன்டர்வியூ கார்ட் வந்திருக்கு. நீ நல்லா எழுதினதுக்கு இதுவே சாட்சி."

"உங்க ஆசிர்வாதம். கடவுள் அருள், என் உழைப்பு இதுதான் காரணம்."

''போஸ்டிங் கிடைச்சவுடனே இப்ப பார்க்கற லெக்சரர் வேலையை விட்டுடப் போறே.''

தெரிந்த விஷயம் தானே என்பது போல் அநுப்பாங் பார்த்தான்.

''இந்த நிலையில, இந்தப் பயணம் அவசியமா?''

கேள்வியே புரியாதவன் போல் ஒரு முறை அவரைப் பார்த்தான்.

''அப்பா?''

''அதுக்கில்லப்பா, எந்த நேரமும் இன்டர்வியூக்கு அழைப்பு வரலாம்.

இந்த நிலையில் கிராமத்துல போய் பத்து நாள் ஒரு மாசம்னு நீ தங்கறது...''

''உங்க கவலை புரியுதுப்பா. நான் என்ன ஜாலி டிரிப்பா கிளம்பறேன். பி.எச்.டி.தீஸிஸ் பேப்பர் சப்மிட் பண்ண - இறுதி கட்டத்துல, சில ஆராய்ச்சி சந்தேகங்களைத் தீர்த்துக்க - இந்தப் பயணம் அவசியம், இல்லையாப்பா? எத்தனை வருஷமா பாடு பட்டு உழைச்சு இந்த இறுதிக் கட்டத்துக்கு வந்திருக்கேன்...''

''எல்லாம் சரிப்பா. ஐ.ஏ.எஸ்ஸை விட வேற எதுவும் பெரிசா என்ன?''

''முனைவர் பட்டத்துக்குப் பின்னாடி எத்தனை வருஷ உழைப்பும் கனவும் இருக்கு! 'முனைவர் ரவிச்சந்திரன் இ.ஆ.ப'. சொல்லிப் பாருங்கப்பா. 'டாக்டர் ரவிச்சந்திரன் ஐ.ஏ.எஸ்' எவ்வளவு பெருமை! மேக்ஸிமம் ஒரு மாச வேலை பாக்கி. வெண்மேனை திரண்டு வரும்போது என் தாழிய உடைக்கணும்?''

அவன் கெஞ்ச அம்மா சுந்தரி உருகிவிட்டார்.

''எங்க, அவன்தான் இத்தனை சொல்றானே, ஏன் தடுக் கறீங்க?''



''நான் தடுக்கலை, சுந்தரி, அவன் ஏதோ கிராமத்துல உட்கார்ந்து இருக்கும்போது, இங்கே ஐ.ஏ.எஸ் இன்டர்வியூவுக்கு அழைப்பு வந்துடுச்சன்னா...''

''கவலையே இல்லப்பா'' என்றவன் டெலிபோன் அருகில் ஒரு குறிப்புப் புத்தகத்தை எடுத்து வந்தான்.

''இதுல நான் தங்கப் போற கிராமம், என் நண்பன் விலாசம் தொலைபேசி செல் எண் எல்லாம் எழுதியிருக்கேன். ஒரு எஸ்.டி.டி. போடுங்க போதும். ஒரு டூரிஸ்ட் டாக்ஸி பிடிச்சாவது உடனே கிளம்பி வந்துடுவேன். டெல்லி இன்டர்வியூ போக ஏற்கெனவே ரெடியா பேக் பண்ணி அந்தப் பெட்டியத் தயாரா வச்சிருக்கேன். பாருங்க. இந்தியன் ஏர்லைன்ஸ்ல என் நண்பன் இருக்கான். அவசரம்னா, எமர்ஜென்ஸி கேட்டாவுல ஏர்டிக்கெட் புக் பண்ணிக் கொடுத்துடுவான். எல்லா ஏற்பாடும் தயார். சரியா? ஐ.ஏ.எஸ் செலக்ட் ஆயிட்டா, என்னால பி.எச்.டிய முடிக்க முடியாதுப்பா. ப்ளீஸ்.''

''சரிப்பா... இவ்வளவு தூரம் நீ சொல்லும்போது, நான் என்ன சொல்றது? சரி, நல்லபடி போயிட்டு வா.'' என்றவர் அவன் கொடுத்த விலாசத்தைப் பார்த்தார். உரக்கப் படித்தார்.

''தியாகராஜன், எம்.எஸ்.ஸி... நம்ம தியாகுதான்?

5, கீழ் சன்னதித் தெரு,

மழுவூர்...

மழுவூர் எது? இந்தத் திருமழப்பாடி பக்கத்துல இருக்கே அதா?''

''அதேதாம்ப்பா. உங்களுக்குத் தெரியுமா?''

''அட, சில தடவை அங்க போயிருக்கேன். என் நண்பன் கூட அங்க இருக்கான். பேரு நமசிவாயம். சமீபத்துல ஒரு கல்யாணத்துக்காக கூப்பிட்டான். அவனுக்குக் கூட ரெண்டு பெண்ணுடா. மூத்தவளுக்கு வர்ற தையில நிச்சயமாம். இளைய

வனுக்கு உன் பிள்ளையப் பார்க்கலாமானு கேட்டான். பொண்ணு மூக்கும் முழியுமா இருக்கா...''

அவர் தன் போக்கில் சொல்லிக் கொண்டே போக, அவன் இரு கைகளையும் கூப்பினான்.

''அப்பா, பிளீஸ். எனக்குப் பி.எச்.டி, ஐ.ஏ.எஸ் இது ரெண்டுதான் இப்பக் குறி. கல்யாணம் கார்த்தி பத்தியெல்லாம் இப்ப பேசாதீங்க.''

''அதில்லடா நல்ல இடம். பொண்ணு அழகா இருக்கா. இப்ப ஒரு நிச்சயம் மட்டும்...''

''அப்பா, அப்பா... வேணும்னா, அம்மா சம்மதிச்சா, நீங்களே கட்டிக்குங்க. என்னை ஆளை விடுங்க.''

''டேய்... டேய்'' அம்மா கையோங்கி வர, விளையாட்டாய் அப்பா பின் பதுங்கினான்.

அப்பாவும் தன் பங்கிற்கு, ''பிள்ளைனா இப்படி இல்ல இருக்கனும்'' என்று சொல்ல, அம்மா இடுப்பில் கை வைத்து இருவரையும் முறைத்தார்.

''அப்படியா? இருங்க இருங்க. இன்னைக்கு அப்பா பிள்ளை ரெண்டு பேருக்கும் சோறு கிடையாது போங்க.'' சொல்லிவிட்டு விளையாட்டாய் வேகம் காட்டி அவர் வெளியேற, ''ஐய்யோ, இருடா, உங்கம்மாவை தாஜா செஞ்சு சோத்துக்கு வழி பண்ணிட்டு வரேன். உனக்கென்ன, கலியாணமாகாதவன். கொடுத்து வச்சவன்'' என்று பொய்ப் பெருமூச்சு விட்டு அப்பாவும் வெளியேற, ரவிச்சந்திரன் சிரித்துக் கொண்டான்.

தேவையானவற்றை நிதானமாய் அடுக்கிவிட்டு, பால்கனியில் போய் நின்றான். காதில் மாட்டிய ஹெட்போன் வழியே யானி குழைந்தார்.

தெருவில் பைக்கில் ஒரு ஜோடி கடந்து போனது. காற்று கூட புக முடியாத நெருக்கத்தில் அவனோடு அவள் ஒட்டிக் கொண்டு, பாப் கூந்தல் பறக்கச் சென்றாள்.



அப்பா சொன்ன நண்பர் மகள் இப்படி தன்னோடு ஒட்டி வருவாளா? பாப் தலைக்குச் சம்மதிப்பாளா? ஜீன்ஸ் போட்டு ஆங்கிலத்தில் சரளமாக பேசுவாளா? ஹீல்ஸ் அணிந்து தனியாக நடப்பாளா?

ஐ.ஏ.எஸ். என்று தன்நிலை உயரும்போது, அதற்கு ஈடு கொடுப்பாளா?

அப்பாவிற்கு ஏன் போயும் போயும் புத்தி இப்படிப் போக வேண்டும். நகரில் படித்த நாகரீகப் பெண்கள் இல்லையா? கிராமத்தில் இருந்து ஒரு பட்டிக்காட்டைக் கூட்டி வந்து, அந்தப் பெண் கதவின் பின் ஒடி ஒளிந்து அன்னியருக்குப் பதில் சொல்லி... தேவையா இதெல்லாம்? எப்படியும் ஐ.ஏ.எஸ் தேறிய பின் திருமணம் பற்றி சிந்திக்கப் போகிறோம். இப்போது அதற்கென்ன?

தோள்களைக் குலுக்கிக் கொண்டவன் கீழே போய் சாப்பிட்டான். அம்மா பரிந்து பரிந்து பரிமாறினாள். அப்பா விவரம் நோண்டினார்.

''தஞ்சாவூர் போயிட்டு மழுவூர் போகப் போற இல்லையா?''

''ஆமாம்பா. நேரா தஞ்சாவூர் சித்தப்பா வீட்டுக்குப் போகப் போறேன்.''

''ஆமாம், சுரேஷ் தான் பாம்பாய்ல வேலை கிடைச்சுப் போயிருக்கானே.''

''போன்போட்டு கேட்டுட்டேன். ஊர் ஊராப் போக அவனைக் சௌகரியம் இல்லையா?''

''அது சரி... முடிஞ்சா என் நண்பனைப் பாரு. அட்ரஸ் இதுதான்'' தயாராய் பாக்கெட்டில் வைத்திருந்த காகிதச் சீட்டை எடுத்து நீட்டினார் அப்பா.

அசட்டையாய் வாங்கிக் கொண்டவன், ''அப்பா, பேருக்குத் தான் மழுவூர்ல தங்கறேனே தவிர, தஞ்சை, கும்பகோணம்,

நாகைனு ஊர் ஊரா கோயில் கல்வெட்டுனு பார்க்கப் போயிடு வேன். எத்தனையோ சின்ன ஊர்கள் வேற இடையில. இதுக்கு நடுவே உங்க நண்பரை... அதுவும் கல்யாணம் பத்தி பயமுறுத் தறீங்க... முடிஞ்சா பார்க்கறேன்.''

பாண்ட் பாக்கெட்டில் துண்டு சீட்டை சொருகிக் கொண்டவன் பெட்டியை எடுத்துக் கொண்டு, ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் பிடிக்க ஓடினான்.

விலாசமெழுதிய துண்டு சீட்டு சரியாக உள்ளே போகாமல் பறந்து வந்து விட்டு வாசலிலேயே விழுந்ததை யாரும் கவனிக்க வில்லை.

ரவிச்சந்திரன் மழூவூருக்கு முதன் முதலாக வருகிறான். ஆறு ஓட, கரையெல்லாம் மரங்கள் சூழ கிராமமே பசுமையாய்ச் சில்லென்று இருந்தது. உடனே மனதுக்கும் பிடித்துப் போனது. நீண்ட நாட்களுக்குப் பின் பழைய நண்பனைப் பார்க்கப் போவது வேறு மனதுக்கு ஏக குதூகலமாய் இருந்தது. என்ன இருந்தாலும், பிற்காலத்தில் எத்தனை நட்பு ஏற்பட்டாலும், பள்ளி நாட்களின் நட்பே தனி. உலகறியா கள்ளம் கபடமற்ற வயதில் ஏற்படும் சூதில்லா அன்பு!

அவனும் தியாகராஜனும் பத்தாம் வகுப்பு வரை ஒன்றாக ஒரே பள்ளியில் படித்தார்கள். இருவரும் பக்கத்துப் பக்கத்துத் தெரு வேறு. கேட்க வேண்டுமா? ரவி தியாகு வீட்டிலோ, தியாகு ரவி வீட்டிலே இருப்பது வழக்கம் என்றானது. அவர்கள் பத்தாம் வகுப்பு படிக்கும்போது, தியாகுவின் பெரியப்பா இறந்துவிட, கணக்கின்றி பரந்த கிடந்த நிலம் நீச்சை கவனிக்க, தியாகுவின் அப்பா, தனியார் வேலையை ராஜினாமா செய்துவிட்டு, குடும்பத் துடன் மழூவூர் போக வேண்டிய நிலை வந்தது. பிரிவு இரு இள நெஞ்சில் வேதனையை விதைத்தது. ஆனால் என்ன செய்ய முடியும்? பிரிந்தார்கள் - உடலால் உள்ளத்தால் - நினைவால் அந்த நட்பு இறுகியே இருந்தது.

அப்பா சென்னை சென்றால், தியாகு ஒட்டிக் கொண்டு கிளம்பி விடுவான். அதேபோல் லீவுக்கு ரவி தஞ்சை சித்தப்பா



வீட்டுக்கு வந்தாலும், போன் செய்து விடுவான். ஒரு நடை ஓடிப்போய் தியாகு ரவியைப் பார்க்காமல் வர மாட்டான். சில வருட காலமாய் வேலைப் பளுவால் சந்திக்க முடியவில்லை. தன் திருமணம் வேறு நிச்சயமாகப் போவதாய் தியாகு சொல்லி இருந்தான். போய் கண்டபடி கேலி செய்ய வேண்டும்.

ஏதேதோ யோசனையுடன் வண்டியில் வந்தவன், கொஞ்சம் கூட 'ரோட் சென்ஸ்' இல்லாமல் கையில் குடத்துடன் வேகமாக வரும் பெண்ணை கடைசி நிமிடத்தில் தான் கவனித்தான். உணர்ந்து வண்டியைச் சற்றே ஒடித்து பிரேக் போட்டாலும், வண்டியின் முன் சக்கரம் மோதி அந்தப் பெண் கீழே விழுந்து விட்டாள்.

ஒரு கணம் ரவிச்சந்திரன் ஸ்தம்பித்துப் போனான்.

## 3

காடும் கழனியும் நாடும் நகரமும்
காற்றின் திசையிலும் நான்கு திக்கிலும்
எடுத்த மறுபிறப்பிலும் மறவாமல்
நங்கை உன்னைத் தேடுகின்றேன்...
எங்கே ஓடி ஒளிந்தாயோ?
எந்தன் முன்னே வாராயோ?

தென்றல் கீழே விழுந்தவுடன், ரவி ஒரு நிமிடம் ஸ்தம்பித்துப் போனான். அடுத்த நிமிடமே சுதாரித்துக் கொண்டான். அவள் அருகே சென்று ''ஹேய், பொண்ணு! ஆர் யு ஆல் ரைட்?'' என்று குனிந்து அவள் கரம் பற்றி தூக்கி விட்டான்.

ஒருவித அதிர்ச்சியில் இருந்தவளால் சட்டென்று பேச முடியாமல் கையெல்லாம் காயத்தைத் தட்டிவிட்டுக் கொண்டு நின்றாள். அவள் மௌனம், மொழி புரியாத காரணத்தால்

என்பதாக நினைத்துக் கொண்டு "ஓ, இங்கிலீஷ், ப்ராப்ளமா? ஏன் பொண்ணு, அடிகிடி படலையே" என்றான்.

சரியாகப் பார்க்காமல் குறுக்கே வந்தது தன் தவறு என்பதை உணர்ந்திருந்தவள், தானே மன்னிப்பு கேட்க இருந்தாள். ஆனால், அவன் 'பொண்ணு' என்று கூப்பிட்டு, ஆங்கிலம் தெரியாதவள் என்பதால் சற்றே ஏளனம் தொனிக்கப் பேசியது அவளுள் சீற்றத்தை ஏற்படுத்தியது. தமிழ் பற்றுள்ள அப்பாவால் வளர்க்கப் பட்டவள். தேவை ஏற்பட்டால் அன்றி ஆங்கிலம் பேசுவது தவறு என்று நினைக்கும் குடும்பம் அவளுடையது. இவனோ ஏதோ தன் மொழி போல் ஆங்கிலத்தில் அலட்டுகிறான். இவன் என்ன ஆங்கிலேயனா, அல்லது ஆங்கிலம் இவன் மொழியா? அதைப் பேசுவதால் மட்டும் ஒருவன் அறிவாளியா? எண்ண வேகத்தில் அவன் பேசாது நிற்க, அவன் பொறுமை இழந்தான்.

"தீஸ் கன்ட்ரி கர்ல்ஸ்... ஓ, தே டிரைவ் யு க்ரேஸி" பொறுமை இழந்து அவன் முணுமுணுத்தான். அவ்வளவுதான். தென்றல் கடைபிடித்த கொஞ்ச நஞ்ச பொறுமையும் பறந்து விட்டது.

"என்னங்க பேசிக்கிட்டேப் போறீங்க? வந்து மோதினதும் இல்லாம உங்க இஷ்டத்துக்குப் பேசுவிங்களோ? இது பட்டணம் இல்ல சார். பட்டிக்காடு. மவுண்ட் ரோடுல அறுபதுல பறக்குறா மாதிரி இங்கே போக முடியாது. குறுக்கே ஆடு போகும் மாடு போகும், நாய், வாத்து, கோழினு எல்லாம் ஓடும். ஏன் மனுஷங் களே கூட போவாங்க. கண்மூடித் தனமா ஓட்டிட்டு, 'ஏன் பொண்ணு, ஆர் யு ஆல் ரைட்'னு கேட்கறீங்க. உயிரே போயிருந்தா? என்ன செஞ்சிருப்பீங்க? பேச வந்துட்டாரு... மைண்ட் யுர் வர்ட்ஸ், பிபோர் யு டாக்?"

பொரிந்து விட்டு, அவனை முறைத்தாள். உதட்டை ஒரு சுழிப்பு சுழித்துவிட்டு, அருகே மண்ணில் சிதறிக் கிடந்த புத்தகத்தையும் சட்டென்று தண்ணீரோடு மண்ணில் உட்கார்ந் திருந்த குடத்தை எடுத்து இடுப்பில் லாகவமாய் வைத்துக் கொண்டு, வேகமாய் நடந்து கடந்து போனாள்.



அவனை ஆட்டி வைத்துவிட்டு அகன்ற அவள் போன திசையையே ஒரு நிமிடம் வெறித்துக் கொண்டு நின்றான் ரவி.

இரவு ஒன்பது மணிக்குள் ஊரே அடங்கிவிடும். மூடிய கதவுக்குள் அவரவர் வீட்டில் சித்தியில் தங்களைத் தொலைத்துக் கொள்வார்களே தவிர, வெளியே நடமாட்டம் இருக்காது.

தென்றல் வீட்டிலும் எட்டு மணிக்கெல்லாம் சாப்பாடு முடிந்துவிடும். அப்பா மட்டும் சாப்பிட்டு விட்டு வாசல் திண்ணையில் அமர்ந்து ஊர் விஷயமாய் தன்னைத் தேடி வரும் சிலரிடம் பேசிக் கொண்டிருப்பாரே தவிர, பெண்கள் வீட்டு வேலையை முடித்துவிட்டு, எட்டரைக்கெல்லாம் படுக்கையைப் போட்டு படுத்து விடுவார்கள். அம்மா, பாட்டி, அக்கா எல்லோரும் ஏதோவது பேசிக்கொண்டோ டி.வி. பார்த்துக் கொண்டோ பொழுதை ஓட்ட, தென்றல் மட்டும் மீண்டும் புத்தகத்தைக் கையில் எடுத்து விடுவாள்.

"அப்படி என்னதான் அந்த புஸ்தகத்துல இருக்கோ. உடம்பு சூடாயிடும்டீ பெண்ணே, இப்படியே படிச்சுக்கிட்டே இருந்தா..." பாட்டி சொல்வது பேத்தியின் காதிலேயே ஏறாது.

இன்று பொன்னியின் செல்வனின் விறுவிறுப்பில் சற்று சீக்கிரமாகவே தன் பங்கு வேலைகளை முடித்துவிட்டு, புத்தகத் தோடு பாயில் சரிந்து விட்டாள் தென்றல்.

குந்தவையும் அவள் தோழிகளும் வானதியின் பயம் தெளி விக்க பொய் முதலையை அரசலாற்றோரம் போட்டு விட்டு விரிட, வந்தியத்தேவன் நிஜமுதலை, பெண்களைத் தாக்க வருவதாய் நினைத்துக் கொண்டு பாய்ந்து முதலை முதுகில் வேல் செருகி அசடு வழியும் குசிகர கட்டம். படிக்கும்போது தென்றலுக்கு ஆற்றங்கரையில் தன்னிடம் வாங்கிக்கட்டிக் கொண்ட இளைஞன் முகம் ஏனோ நினைவில் மோதியது. அவன் அவள் கரம் தொட்டுத்தூக்கி விட்ட நினைவில், அந்த இடத்தைத் தன்னை அறியாமல் நீவி விட்டுக் கொண்டாள்.

துறுதுறு என்ற முகமும், சீர் பல் வரிசையும், கூர் பார்வையுமாய் கம்பீர அழகனாய்த் தான் இருக்கிறான். பாவம், அப்படி என்ன கேட்டுவிட்டான் 'ஆர் யு ஆல்ரைட்?' தான் பதில் சொல்லாததால், ஆங்கிலம் புரியவில்லை என்று நினைத்துவிட்டான். அதற்கு இத்தனை ஆர்ப்பாட்டம் செய்திருக்க வேண்டாமோ?

சீ, இதென்ன ஊர் பேர் தெரியாதவனைப் பத்தி இப்படி நினைவு ஓடுகிறது. அவன் தள்ளிவிட்டான். பதிலுக்குக் கத்திவிட்டோம். அவ்வளவுதான். கணக்கு முடிந்தது. மனமே அந்த நிகழ்ச்சியை மற. கதையில் கவனம் செலுத்து.

ஆஹா, வந்தியத்தேவனும் குந்தவையும் காதலித்ததல்லவா காதல்! பார்த்த முதல் பார்வையிலிருந்து ஒருவர் மனதில் ஒருவர் புகுந்து விட்டதை உணர்ந்தும், அதை வார்த்தைகளாலோ செயல்களாலோ அந்தமாய் வெளிப்படுத்தாமல் என்ன கண்ணியக் காதல்!

'உங்கள் கரத்தைப் பற்றிய இந்தக் கரம் வேறு ஒருவர் கரம் பற்றாது' - என்ன அருமையாய் ஒரே வரியில் தன் காதலை உறுதி செய்கிறாள் குந்தவை. அவன் கடைக்கண் பார்வையில் எத்தனை கடின வேலைகளை உயிருக்கும் அஞ்சாமல் செய்து முடிக்கிறான், அவன்!

எனக்கும் இப்படி ஒரு வாழ்க்கைத் துணை கிடைக்குமா? வாழ்க்கைத் துணை என்றவுடன் மீண்டும் அந்த இளைஞன் நினைவில் வந்தான்... ஏன்? யார் அவன்? பட்டணத்துப் பேர்வழி என்று முகத்தில் எழுதி ஒட்டியிருக்கிறதே யார் வீட்டிற்கு வந்திருப்பான். ஒரு வேளை நம் கிராமம் கடந்து எங்காவது போகிறானா? ஒரு வழிப் போக்கனைப் பற்றி இத்தனை சிந்தனை அவசியமா?

"தேன், படிக்கறியா, கனவு கண்டிகிட்டிருக்கியா?" அக்கா வேனில் அருகே வந்து உட்கார்ந்தாள். தான் இந்த இளைஞனை நினைத்தது முகத்தில் நாணமாய் வெளிப்பட்டிருக்குமோ என்று ஒரு நிமிடம் திகைத்தாள். பின் சமாளித்துக் கொண்டாள்.



கனவு காண்றதெல்லாம், இப்ப உன்னோட நிலை, காமாலைகாரனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்னு, உன் நிலையில என்னை நிறுத்தப் பார்க்கறியா? என்ன விஷயம் சொல்லு?"

"நாளைக்குக் கோயில் திருவிழா, கோயில்ல அன்னதானம். அப்ப ரெண்டு மூட்டை அரிசி கொடுத்திருக்கார்."

"தெரிஞ்ச விஷயம் தானேக்கா."

"அதில்லடா. அஞ்சு கிலோ வெல்லம் கொடுக்கறதா அப்பா சொல்லியிருக்காரு. விட்டுப் போச்சு..." ஆள்காரங்களும் வீட்டுக்குப் போயிட்டாங்க."

"போய் நான் கொடுத்துட்டு வாணும். அவ்வளவுதானே?"

"மணி ஏழரை தானே ஆகுது. கோயில் திறந்திருக்கும். இப்ப கொடுக்காட்டி விடிகாலையில ஓடணும்.

"அட, இப்பவே ஓடிப் போய்க் கொடுத்துட்டு வந்துடறேன். சரியா?"

"அஞ்சு கிலோவை ஒரேடியா எப்படி தூக்கிட்டுப் போவே? நான் கூட வரட்டா?"

"ஐயோ, வேற வினையே வேண்டாம். பாட்டி என்னையே ஏன் போறேனு கொடைஞ்சு எடுப்பாங்க. நீ கிளம்பினா கேட்கணுமா கல்யாணம் பேசி இருக்கற பொண்ணு தனியா ராத்திரியில போகலாமானு ஒரு பிடி பிடிச்சுடுவாங்க. அஞ்சு கிலோ வெல்லம் ஒரு வெய்ட்டா. இப்படி கொடுக்கற நேரத்துல ஓடிட்டு வந்திடுறேன். சரியா?"

கோயிலில் அதிக கும்பல் இல்லை. இங்கொன்று அங்கொன்றுமாய் வயதான சிலர் தவிர தரிசனத்திற்கு வந்தவர்கள் அதிகம் இல்லை. மறுநாள் திருவிழாவிற்காக ஏற்பாடு செய்து கொண்டிருந்தவர்களால் சற்றே கலகலவென்று இருந்தது. விழா குழுவினரிடம் வெல்லத்தை ஒப்படைத்தவள், கோயிலை ஒரு சுற்று சுற்றி நமஸ்கரித்து விட்டு வெளியே வந்தாள்.

தெருவில் கால் வைத்ததும், முதல் வீட்டிலிருந்து கத்தலும் கூச்சலுமாக சப்தமும், வீரிடலோடு ஒரு சிறுவன் ஓடி வருவதும் புரிய, அப்படியே ஒரு நிமிடம் நின்று விட்டாள். தென்றல். பத்து வயது பாலமுருகன் தான் ஓடி வந்தான். இவளைக் கண்டவுடன் இவளிடம் வந்து தஞ்சம் புகுந்தான். சித்தியிடம் தினம் கொடுமை அனுபவிக்கும் சிறுவன் என்பதால் எப்போதுமே எல்லோருக்கும் அவனிடம் ஒரு அனுதாபம் உண்டு. தென்றலும் அவனிடம் அதித அன்பு வைத்திருந்தாள். தன் வீட்டுப் பக்கம் அவன் பசியோடு வருவது கண்டால் உணவளிப்பாள். சித்தி அடித்து வீங்கிப் போன முகத்துடன் வந்தால், வென்னீர் ஒத்தடம் தருவாள். தீப்புண்களோடு அழுது கொண்டு வரும் சிறுவனுக்கு மருந்தும் ஆறுதலும் அளிப்பாள். பாவம், இன்று என்ன அவதியோ.

ஓடி வந்து தன் இடை சுற்றி பயந்து பின்னால் நிற்கும் சிறுவனை தன்னோடு அணைத்துக் கொண்டாள். அவன் உடல் வெடவெடவென நடுங்கிக் கொண்டிருந்தது. பின்னால், கொள்ளிக்கட்டையோடு தலைவிரி கோலமாய் ஓடி வந்து கொண்டிருந்தாள் சிறுவனின் சித்தி மரகதம்.

"இன்னைக்கு ரெண்டுல ஒண்ணு பார்க்காம விடமாட்டேன். இருடா பொறுக்கி நாயே... உன்னை ரெண்டா வகுந்துட்டுத் தான்டா மறுவேலை. எங்க போய் ஓடி ஒளியற..." கத்திக் கொண்டே ஆக்ரோஷமாய் வரும் மரகதத்தைக் குறுக்கே நின்று தடுத்தாள் தென்றல்.

"என்ன மரகதம் அக்கா, இது நடுத்தெரு. சின்ன பிள்ளை கிட்ட போய்... என்ன இதெல்லாம்?..."

"விடுங்க என்னை, விடு. இவனா சின்ன பிள்ளை? பொறுப் பில்லாத பொறுக்கி நாய். மூணு வேளை மூக்கைப் பிடிக்கத் திங்கத் தெரியும். ஒரு முன்னூறு ரூபா பணத்தை ஒழுங்கா எடுத்துப் போகத் தெரிலையாமா?"

திமிறிக் கொண்டு கத்தினாள் மரகதம். அவளை முதலில் சாந்தப்படுத்த நினைத்தாள் தென்றல்.



"இருங்க, இருங்க... முதல்ல கொஞ்சம் நிதானிங்க. இப்படி படபடத்தீங்கன்னா உங்க உடம்புக்கு ஆகாது."

"என் பிராணனை வாங்கத்தானே இந்தச் சனியனை என் தலையில கட்டிட்டுப் போயிருக்கா மகராசி. இவனாலேயே என் உடம்பு, உசிரு எல்லாம் போகப் போகுது. மளிகைக் கடைக்குப் பணத்தைக் கொடுத்துட்டு வாடானு அனுப்பிச்சா, தொலைச்சுட்டு வந்து நிக்கறான். படுபாவி... படுபாவி... முன்னூரு ரூபாய். இவன் கைகாரன். தொலைச்சிருக்க மாட்டான். எங்கேயாவது ஒளிச்சு வச்சிருப்பான்..."

"என்னக்கா சின்ன பிள்ளை நிஜமாவேத் தொலைச்சிருக் கலாம் இல்ல..." பேசியபடி கொள்ளிக்கட்டையைப் பிடுங்க முயன்றாள் தென்றல்.

அவள் அவனுக்குப் பரிந்து பேசுவத மேலும் அவளுக்கு ஆத்திரம் ஏற்படுத்த, என்ன பேசுகிறோம் என்றே இல்லாம வாய்க்கு வந்தபடி பேசத் துவங்கினாள் மரகதம்.

"என்ன, என்னவோ அவனுக்கு ரொம்ப பரிஞ்சுகிட்டுவரே? அவனுக்கு நீ என்ன கூட்டாளியா? உன்கிட்டதான் பணத்தைக் கொடுத்து வச்சிருக்கானா?" தென்றலுக்குச் சுரீரென்றது. உடல் நடுங்க தன்னைக் கட்டிக் கொண்டு நின்ற சிறுவனின் கை களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட தென்றல், அவனிடம், "டேய், இன்னைக்கு ராத்திரி உன் மாமா வீட்ல போய் படுடா. உங்கப்பாகிட்ட நான் சொல்லிக்கறேன்." என்றாள்.

பையன் விட்டால் போதும் என்று ஒரே ஓட்டமாய் ஓடினான். மெல்ல மரகதத்திடம் திரும்பிய தென்றல், "அக்கா, நீங்க பேசறது நல்லால்ல" என்றாள்.

பையனை தண்டிக்க முடியாத கோபம் மரகதத்திற்கு. அதுவும் இவள் வந்து குறுக்கிட்டு தன் குடும்ப விஷயத்தில் மூக்கை நுழைப்பதும், மாமா வீட்டிற்கு பையனை அனுப்பியதும், தன் கணவனிடம் இவளே சொல்லிக் கொள்வதாய்ச் சொல்வதும்

சத்தமாய் பிடிக்கவில்லை. இவள் யார் இப்படித் தலையிட்டு இஷ்டத்திற்குப் பேச?

''என்னடி என்னவோ பேசறே? நான் பேசறது நல்லால்லையா. நீ செய்யறது நல்லால்லையா?'' இவள் உரக்க குரலெடுத்து கத்த, அக்கம் பக்க வீடுகளில், வெளியே வர ஆரம்பித்தார்கள். அப்போது தான், தியாகுவும் ரவியோடு கோயிலுக்கு வருவதற்காக வந்து கொண்டிருந்தான். தென்றல் அவர்களை கவனிக்கவில்லை. ஒரு சிறுவனைக் காப்பாற்றப் போய் இப்படி ஒரு பழியா என்ற சீற்றம் எழ அவளும் அழுத்தமாக, ஆனால், அதிகம் கத்தாமல் சீறினாள்.

''அக்கா, யாருகிட்ட பேசறீங்க என்ன பேசறீங்கனு தெரிஞ்சு பேசுங்க. உங்க முன்னூறு ரூபா காசுக்கு வீங்கிக்கிடக்கிற குடும்பமில்ல நாங்க. நீங்க போட்ட பழி எங்கப்பா காதுல விழுந்தா என்னாகும்னு யோசிங்க.''

அவ்வளவுதான். கப்பென்று பாலில் தெளித்த நீரால் பொங்கும் பால் அடங்குவது போல் அடங்கினாள், மரகதம். மரகதத்தின் கணவன் நமசிவாயத்தின் பண்ணையில் தான் கணக்குப் பிள்ளையாய் வேலை செய்து கொண்டிருந்தான். பொதுவாகவே நமசிவாயத்திற்கு ஊரில் நல்ல பேரும் மரியாதையும் இருந்தது. அதிலும் முதலாளி மகள் ஏதாவது வத்தி வைக்க, கணவன்வேலைக்கே அது பாதகமாய் போய்விட்டால் என்ன செய்வது என்ற பயம் எழ, கோபத்தை அடக்கவும் முடியாமல் புஸ்புஸ் என்று பெருமூச்சு விட்டாள். மரகதம், கோபத்தை தவறான முறையில் தவறான ஆளிடம் பிரயோகித்தது புரிந்தது. மெல்ல இறங்கி வந்தாள்.

''முன்னூறு ரூபாய் பறிபோன கோபத்துல ஏதோ பேசிட்டேன். தப்புதான் மன்னிச்சுடு, தென்றலு.'' வெளியே வந்து எட்டிப் பார்த்தவர்கள் உள்ளே போனார்கள். அப்போது தான் வேகமாய் வந்த தியாகுவும் அவனைப் பின்தொடர்ந்த ரவியும் அவளை நெருங்கினார்கள்.



ரவியை முதலில் தென்றல் கவனிக்கவில்லை. அவளை மறைத்தபடி நின்ற தியாகுவை ஆச்சர்யமாய்ப் பார்த்தாள். அவனோ கவலையாய் ''என்ன பிரச்னை தென்றல்,'' என்றான்.

''ஒண்ணும் பெரிசா இல்லை. வழக்கமான பிரச்சனைதான் மாமா. ஆமாம், நீங்க எங்க இங்க, இந்த நேரத்துல?'' வழக்கமான பிரச்னை என்றவுடன் அதே ஊர்க்காரனான தியாகு புரிந்து கொண்டான். தென்றல் பாலமுருகனுக்குப் பரிந்து பேசியதால், மரகதம் ஏதாவது கத்தியிருப்பாள் என்று யூகித்துக் கொண்டான். ஆனால், இது எதுவும் புரியாத ரவி, இந்தப் பெண் தெருவில் சண்டைக்காக அலையும் சண்டைக் கோழி போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டான். அவனால் அழகான தென்றலை ரசிக்க முடியவில்லை. மாறாக ஒரு வெறுப்புதான் சூழ்ந்தது. இது எதுவும் அறியாத தியாகு, ''என் நண்பன் பட்டணத்துலயிருந்து வந்திருக்கான். சும்மா இப்படியே கோயில் வரை அவனோட நடந்துட்டுப் போகலாம்னு வந்தனே்'' என்று சற்று நகர, ரவி முழுமையாய் அவள் பார்வைக்குச் சிக்கினான்.

அவனைப் பார்த்தவுடன் அவள் முகம் குப்பென்று சிவந்து விட்டது. இவன் எதிரேயா இப்படி நடுரோட்டில் சண்டை போட்டுக்கொண்டு நின்றோம் என்ற வெட்கம் வேறு. என்ன நினைத்துக் கொள்வான் சே! என்று ஒரு நொடி தலை குனிந்து நின்றாள். ஆனால், அடுத்த நொடி இயல்பாய் உள்ள தைரியம் தலை தூக்கியது. என்ன நினைத்தால் எனக்கென்ன? தலையை சிலுப்பி நிமிர்ந்தாள்.

''இதுதான் என் நண்பன் ரவிச்சந்திரன்... ரவி, இது தென்றல், என் வருங்கால மைத்துனி'' கைகளை தாமரை மொக்காய் குவித்து, கண்களில் குறும்புடன், ''வணக்கம்'' என்றாள் தென்றல்.

அவனோ பதிலுக்கு வணங்காமல், ''தென்றல்னு பேர் வைக்கறதுக்குப் பதிலா புயல்னு வச்சிருக்கலாம்'' என்றான்.

அலட்சியமாய் பாண்ட் பாக்கெட்டில் கைகளை விட்டபடி நின்று, முகம் திருப்பி எங்கோ பார்த்தான். அவன் அலட்சியம் அவள் மனதில் தைத்தது.

## 4

நான்'' என்ற கர்வம்
என் கண்ணை மறைக்கும்.
என் காதல் கண்மணியை
மனம் உணர மறுக்கும்.
நீயே நான் என்பது உணர
''நான்'' மறையும்.
உணரும் நிலை எனக்கு
எப்போது கிடைக்கும்?

கிராமத்தின் விடிகாலைப் பொழுது இன்னும் ரம்யமாய், சுகந்தமாய் இருந்தது. அதுவும் பட்டணவாசியான ரவிச்சந்திரனுக்கு மாறுதலாகவும் இருந்தது. மெல்ல பல்துலக்கி, அப்போது கறந்த சுத்தமான பசும்பாலில் நுரை பொங்க காப்பியை ரசித்துப் பருகினான். வாசல் திண்ணையில் அமர்ந்து பேப்பர் புரட்டினான்.

''ரே... ரே... ப்ர்ர்...'' என்ற வண்டிக்காரன் குரலோசையுடன் ஜல்ஜல் என்று மாட்டு வண்டி ஒன்று கடந்தது. மந்தையாய் ஆடுகளும் மாடுகளும் இடையன்கள் பின் தொடர ''மா'' என்று கத்திக் கொண்டு மேய்ச்சலுக்குப் போயின.

சைக்கிளில் காய்கறிக்காரன் கூவிக்கொண்டு போனான்.

கோவிலின் கீழத் தெருவில் இவர்கள் வீடு இருந்ததால், மைக்கில் கோவிலிலிருந்து கசியும் தேவாரப் பாடல் இவர்கள் வீட்டிலும் தெளிவாகக் கேட்டது.

வாகனப் புகை, வண்டி இரைச்சல் எதுவும் இல்லாத சுத்தமான சுற்றுச்சூழல். இனிய இசை, வைக்கோலும் தவிடும் தாவரங்



களும் இணைந்து கிராமீய மணம். ஆரோக்யமான இயற்கைச் சூழல் சற்று மெய் மறந்துதான் அமர்ந்திருந்தான் ரவிச்சந்திரன்.

''என்னடா, செதுக்கி வச்ச ஐயனார் சிலை மாதிரி உட்கார்ந்திருக்கே? வரியா ஆத்துக்குப் போய்க் குளிச்சிட்டு வரலாம்.'' கையில் துண்டும் சோப்பு டப்பாவுமாய் வந்து நின்ற தியாகு கேட்க, ரவி சிரித்துக் கொண்டான்.

''ஏன்டா சிரிக்கறே?''

''தண்ணின்னா என்னன்னே தெரியாத சென்னைப் பட்டணவாசிடா நான். என்னைப் போய் நட்டாத்துல இறக்கி விட உனக்கு ஆசையா? சரி, ஏன் அந்த ஆசையைக் கெடுப்பானேன்? கரையில நின்னு கால் கழுவிட்டாவது வரேன்.''

உள்ளே போய் துண்டு, மாற்று லுங்கி, சோப் டப்பா என்று எல்லாம் எடுத்து வந்தான்.

''அப்படியே ஒரு சொம்பு எடுத்து வரது தானே? கரையில உட்கார்ந்து மொண்டு மொண்டு ஊத்திக்கலாம்.''

''என்ன கிண்டலா?''

இருவரும் இளம் பருவ நினைவுகளை அசைபோட்டபடி நடந்தார்கள். ஆறு நெருங்கியது. வேலை பற்றி பேச்சு திரும்ப, தியாகு ஆர்வமாய் கேட்டான்.

''நீ இப்ப என்னதான்டா செய்யறே? லெக்சரரா இருக்கே. பி.எச்.டி செய்யறேன்கறே. ஐ.ஏ.எஸ்னு சொல்றே. இங்க வந்து எதுக்கு டேரா போட்டிருக்கே?'' கேட்டபடி படித்துறையில் வேகமாய் இறங்கி நீரில் மூழ்கி எழுந்தான் தியாகு.

''ஐ.ஏ.எஸ். ரிட்டன் டெஸ்ட் எல்லாம் ஜயா பாஸ் பண்ணியாச்சு. இன்டர்வியு தான் பாக்கி...'' படித்துறையில் உட்கார்ந்து விட்டான் ரவி.

''சந்தோஷம்.'' மீண்டும் ஒரு முறை மூழ்கி எழுந்தான், தியாகு.

''பி.எச்.டி முடியற கட்டம் வந்தாச்சு. சோழர் காலக் கோவில் கட்டுமானங்கள்னு பொதுத் தலைப்பு. சின்னச் சின்ன டவுட்ஸ் கிளாரிபை பண்ண இங்க வந்திருக்கேன். முடிஞ்சவுடன் தீஸிஸ் சப்மிட் பண்ணிடுவேன். வேலையை ரிசைன் பண்ணிட்டு, ஐ.ஏ.எஸ் போஸ்டிங் எத்துக்க வேண்டியதுதான் - அப்கோர்ஸ் இன்டர்வ்யுவில் செலக்ட் ஆனால். நிச்சயம் ஜெயிப்பேன்னு நம்பிக்கை இருக்கு.'' மெல்ல காலை மட்டும் நீரில் நீட்டி ஆட்டினான்.

''பி.எச்.டி எதுக்குடா? ஐ.ஏ.எஸ் ஆகப்போற...''

''பி.எச்.டி என் அறிவுத் தாகத்துக்குடா. ஐ.ஏ.எஸ் ஒரு அந்தஸ்தான பதவிக்கு... ஹிஸ்டரி மேஜர். நல்ல ரேங்க்ல வந்திடுவேன். அதனால, ஐ.ஏ.எஸ் போஸ்டிங் போடும் போது கூட ''டிபார்மெண்ட் ஆஃப் ஆர்கைவ்ஸ்ல தலைவரா பதவி கேட்கப் போறேன். எத்தனை கோயில் கல்வெட்டுக்கள் சரியா கவனிக்கப்படாம இருக்கு தெரியுமா? நினைச்சா நெஞ்சுல ரத்தக் கண்ணீர் வருதுடா. இதே பாரம்பரியமோ அழகான கட்டு மானங்களோ மேலை நாட்டுல இருந்தா எப்படி கொண்டாடி இருப்பாங்க. ஏன், அமெரிக்கனுக்கு இந்தப் பாரம்பரியம் இருந்திருந்தா, அவன் அதை எப்படிப் போற்றி இருப்பான்! நமக்குத் தான் நம்மகிட்ட இருக்கற பல நல்ல விஷயங்கள் கண்ணுக்கேத் தெரியறதில்லைடா. எனக்கு பதவி கையில வரட்டும் அப்புறம் பார்...'' கண்களில் ஏகக் கனவோடு பேசினான் ரவி.

முகத்தில் வழிந்த நீரைக் கையால் வழித்தபடி தியாகு. ''சரி, சரி, ரொம்ப சூடாயிட்ட, வந்து தண்ணியில் கொஞ்சம் குதி. கூலாகலாம்.'' என்றான்.

மெல்ல ஜாக்கிரதையாய் கால் வைத்து இறங்கினான் ரவி. படித்துறையின் அருகேயே இடுப்பாழ நீரில் நின்று கொண்டான்.

''இன்னும் கொஞ்சம் இறங்கி வாடா?''

''ஐயோ சாமி, ஆள விடு. இதுக்கே லுங்கியெல்லாம் அடிச்சுட்டுப் போயிடும் போல இருக்கு.''



''அடப்பாவி, லுங்கியோடவா குளிக்கறே? உன்னைத் திருத்தவே முடியாதுடா. சரி. நீ இப்படியே குளிச்சுட்டு கரையேறு. நான் கொஞ்சம் நீஞ்சிட்டு வரேன்.''

அடுத்த நிமிடம் நீருக்குள் காணாமல் போனான் தியாகு. ரவி சற்றே குளிக்க சிரமப்பட்டான். அளந்து குளிக்கும் சென்னைக் குளியலுக்கு இந்த ஆற்று நீர்க் குளியல் சுகமாய்த்தான் இருந்தது. ஆனால் லுங்கி அவிழாமல் சோப் போட்டுக் குளிப்பது கஷ்டமாக இருந்தது. கிராமத்து ஆண்கள் மீனாய்த் துள்ளி நீரில் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆண்கள் படித்துரையை ஒட்டி வளையும் வளைவில் பெண்கள் படித்துறை போலும். பெண்களின் சிரிப்பொலியும் பேச்சொலியும் கேட்டதே தவிர, பார்க்க முடிய வில்லை. நல்லவேளை பெண்கள் கண்ணில் படாததால் சற்று வெட்கம் விட்டு குளிக்க முடிகிறது என்று எண்ணிக் கொண்டான். மணி ஏழரை நெருங்கும் நேரமாதலால் அதிக அளவில் பெண்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. இப்படி எந்த எண்ணமும் இல்லாமல் தியாகு குளிப்பது புரிந்தது. பழக்கம் என்று எண்ணிக் கொண்டான். சோப் சரியாகப் போட்டுக் குளித்த திருப்தி இல்லாமல் மேலும் இரண்டு முக்கு மேலாக மூழ்கி விட்டு கரை ஏறிவிட்டான் ரவி.

தலை துவட்டி, புது லுங்கி மாற்றி படித்துறையில் நின்ற போது, ஆலமரத்தின் குளிர்காற்று அவன் தேகம் வருடிப் போனது. நூறு பாட்டில் சலைன் ஏற்றினால் ஏற்படும் புத்துணர்வை அந்த ஒரு நொடியில் உணர்ந்தான்.

குபீரென்று நீரிலிருந்து தலை தூக்கி அவனருகே வந்து சேர்ந்த தியாகு, ''என்னடா குளிச்சாச்சா?'' என்றான்.

''ம், ஆச்சு, சில்லுனு என்ன காத்து! என்ன புத்துணர்ச்சி!''

தாவி படிகளில் ஏறி துண்டை எடுத்துக் கொண்ட தியாகு, ''அது தாண்டா கிராமம்'' என்றான்.

''பக்கா கிராமத்தானா மாறிட்ட நீ. ஓடற ஆத்துல என்னமா நீஞ்சற! இது தாண்டா கிராமம்னு பேசற...''

''உண்மைதாண்டா ரவி, மாசு இன்னும் அதிகம் படியாத ஆரோக்ய சூழல். நல்ல கொள்ளிடத் தண்ணீர். அமைதியான வாழ்க்கை.

இதைவிட மனுஷனுக்கு என்னடா வேணும்? இந்தியா வோட ஜீவநாடியே கிராமம் தான்னு காந்திஜி சொன்னது எவ்வளவு உண்மைனு நீயே போகப் போகப் புரிஞ்சப்பே, பார்.''

''அப்பா சாமி, ஆளை விடு! நான் உன்னோட ஆர்க்யூ பண்ண வரலை. உனக்கு இந்த வாழ்க்கை முறை சரிப்பட்டு வரலாம். எனக்கு வராது. என்ன, ஒரு மாறுதலுக்கு ஒரு வாரம் பத்து நாள்னு தங்கி ரசிக்கலாம். அவ்வளவு தான். அந்த நகர பரபரப்பு இல்லைனா நான் காலி.''

''எனக்கு வரப்போறவ இப்படி சொல்லிடக் கூடாதேனு தான் நான் கிராமத்தைச் சேர்ந்த நல்ல பொண்ணாவே என் வாழ்க்கைத் துணையாத் தேர்ந்தெடுத்தேன். ஆமாம், இவ்வளவு சொல்றியே, உனக்கு எப்படா கல்யாணம்?''

''ஏண்டா நான் சுதந்திரமா இருக்கறது உனக்குப் பிடிக்கலையா?''

துண்டைப் பிழிந்து உதறி இடுப்பில் கட்டிக் கொண்டான் தியாகு.

''அதுக்கில்ல உனக்கு குடும்பப் பொறுப்பு காலாகாலத்துல வரவேண்டாம்? ஏன்டா யாரையாவது டாவடிக்கறியா?''

''சேச்சே, எது நேரம் அதுக்கெல்லாம்?''

''ரொம்ப தான் அலட்டாதே. நிஜமாக் கேட்கறேன்... உனக்கு எந்த ஜோடி ஒண்ணை நான் சஜஸ்ட் பண்ணவா?''

''சொல்லேன். ஏதாவது நாட்டுக்கட்டையாத்தான் நீ சொல்லுவே.''



''என் வருங்கால மச்சினினு உனக்கு நேத்து அறிமுகப் படுத்தினேனே, தென்றல்...''

''தோடா. நான் நல்லா இருக்கறது உனக்குப் பிடிக்கலையா? ரோடு ரோடா அவ சண்டை போட, அதைப் போய்ப் பஞ்சாயத்து பண்ணவே எனக்கு நேரம் சரியா இருக்கும். ஆளவிடுப்பா. எனக்கு வர்ரவ நல்ல 'கஷாகசர்டா' இருக்கணும்.''

அவன் சொன்னதைத் தமாஷாக எடுத்துக் கொண்டு தியாகு சிரித்தபடி நடந்தான். ரவி தொடர்ந்தான்.

பெண்கள் படித்துறைப் பக்கம் குளித்தபடி இவர்கள் பேசுவதை யதேச்சையாகக் கேட்ட தென்றலால், இதைத் தமாஷாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

## 5

பக்தனுக்கு
கடவுளை அறிய முடிவதில்லை.
கடவுளுக்குமா பக்தன் தெரியாது?
எனக்குத்தான் உன்னைத்
தெரியவில்லை.
உனக்குமா?

தஞ்சாவூர் பெரிய கோயில் பிரகாரத்தில் கால் வைத்தவுடன், வழக்கம்போல், அதன் பிரும்மாண்டத்தில் ஒரு நிமிடம் லயித்து நின்றான் ரவி. நந்தி தாண்டி வாராகியை தரிசித்து விட்டு மெல்ல படியேறி சிவன் சன்னதியை அடைந்தான்.

'நான் தான் பெரியவன். என் முன் நீ துரும்பு. நான் இருக்க, நீ ஏன் கலங்க வேண்டும்?' என்பது போல் பெரியவர் விஸ்வரூபமாய் நின்றார்.

மனமுருகப் பிரார்த்தித்துக் கொண்டு வெளியே வந்தான். பிள்ளையார், கரூரார், முருகன், அம்மன், நடராஜர் என்ற

ஒன்றுவிடாமல் சன்னதி சன்னதியாய்த் தரிசித்து விட்டு, நிழல் இடமாய்ப் பார்த்து அமர்ந்து கொண்டான். எங்கிருந்து எப்படிப் பார்த்தாலும் கோபுரம் பிரம்மாண்டமாய் அழகாய் விளங்கியது. மணி பார்த்தான். பதினொன்று என்றது கடிகாரம். எழுந்து வெளியே வந்து பைக் மிதித்துக் கிளம்பினான்.

சரஸ்வதி மகால் வந்து நிறுத்தினான். இணை இயக்குநர் என்ற பெயர் பொறித்த அறைக்குள் நுழைந்தான்.

ஒரு நிமிடம் இவனைக் கூர்ந்து பார்த்தவர், புரிந்து கொண்டவராக, ''வாங்க, வாங்க. எவ்வளவு தூரம் இருக்கு உங்க ஆராய்ச்சி?'' என்று மறக்காமல் கேட்டார்.

''உங்க உதவியினால, முடியற தருவாயில் இருக்கு. இங்க நான் எடுத்த ரெபரன்ஸ் ரொம்ப உபயோகமாக இருந்தது?''

''சந்தோஷம். ஐ.ஏ.எஸ் எந்த நிலையில் இருக்கு?''

''இண்டர்வ்யூ தான் பாக்கி, சார்.''

''வெரிகுட். உங்களை மாதிரி பிரில்லியண்ட் இளைஞர் களைச் சந்திக்கும் போது ப்ரைட்டா தெரியுது... சரி, இப்ப நான் என்ன செய்யணும் உங்களுக்கு?

''தஞ்சை பெரிய கோயில், தில்லை நடராஜர் கோயில், திருவையாறு பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம்னு - என் ஆராய்ச்சிக்கு உட்பட்ட கோயில்கள்ல இருக்கிற சில கல்வெட்டுக்கள் செப்பேடுகளை நேரடியா படிச்சு எழுதிக்க நினைக்கறேன். இது என் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட பல சந்தேகங்களைத் தீர்க்க உதவும். அதே சமயம் தீஸிசுக்கும் நல்ல வெய்ட் கொடுக்கும்.''

''நல்ல ஐடியா தான்.''

''கல்வெட்டுக்கள், செப்பேடுகளையெல்லாம் படிச்சு எனக்கு நம்ம தமிழ்ல சொல்லக்கூடிய யாராவது ஒருத்தர் வேணுமே. அதுக்குத் தான் உங்க உதவி தேடி வந்தேன்.''



''ம், நிறையப் பேர் இருக்காங்க. நீங்க இப்ப எங்க தங்கி இருக்கீங்க. தஞ்சாவூர்ல யாரோ ரிலேட்டிவ் வீட்லனு சொன் னீங்களே...''

''இல்ல சார். என் சித்தப்பா ரெண்டு மாசம் மகனோட தங்கி இருக்க மும்பாய் போயிருக்கார். நான் என் நண்பன் வீட்ல தங்கி இருக்கேன். திருமழப்பாடி பக்கத்துல, மழுவூர்னு...''

''ஓ! வெண்ணெய கையில வச்சுக்கிட்டு ஏன் நெய்க்கு அலையறீங்க?''

''புரியலை.''

''மழுவூர்லயே ஒரு பொண்ணு இருக்கா. சரித்திரத்துல எம்.பில் பண்ணி இருக்கா. செப்போடு, ஓலைச்சுவடி, கல் வெட்டுனு எல்லாம் படிப்பா. அவங்கப்பா நல்ல தமிழ் ஸ்காலர். இந்தப் பொண்ணுக்கு ஹிந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம்னு நிறைய மொழிகள் தெரியும். மழுவூர்லயிருந்து ஒவ்வொரு முறையும் தஞ்சை வந்து, அங்கிருந்து உங்களுக்கு அஸிஸ்ப் பண்ணப் போற ஆளை கோயில் கோயிலாக் கூட்டிப் போறதுக்கு பதில், அங்கிருந்தே கூட்டிப் போறது சுலபமில்லையா?''

''பேர் விலாசமெல்லாம் சொல்லுங்க சார். நோட் பண்ணிக் கறேன். ஆமாம், பெண்ணா இருக்கறதால என் கூட வரு வாங்களா?''

''ஓரளவு நல்ல பரந்த மனசு உள்ளவங்கதான். பேசிப் பாருங்க. பொண்ணு பேரு தென்றல். அட்ரஸ்...''

''சார், பேர் என்ன சொன்னீங்க?''

''தென்றல், ஏன்? தெரியுமா?''

யோசனையாய் இருந்தவன், ''ம்'' என்று தலையாட்டினான்.

''அப்ப நல்லதாப் போச்சு. போய்ப் பேசிப் பாருங்க.''

''சரி. எதுக்கும் வேற ஒருத்தர் விலாசம் கொடுங்களேன்.''

அவர் தனக்குக் கீழ் பணிபுரிபவரை அழைத்து, சிலர் விலாசங்களைக் கேட்டுத் தந்தார். எல்லாமே தஞ்சைக்குள் இருந்தன.

ரவிச்சந்திரன் நன்றி கூறி விடை பெற்றான்.

கிடைத்த விலாசங்கள் ஒவ்வொன்றாய்ப் போய்ப் பார்த்தான் ரவிச்சந்திரன். ஏதேதோ காரணங்களால் வந்து உதவ முடியாத நிலை என்று அவன் சந்தித்த அனைவரும் சொல்லிவிட மனம் வெறுத்துப் போய் ஊர் திரும்பினான். தியாகு வயலில் இருப்பதாகச் சென்றான். இவனைப் பார்த்தவுடன் களத்து மேட்டிலிருந்த ஒடி வந்தான், தியாகு.

"என்னடா, போன காரியம் முடிஞ்சுதா?"

"அதை ஏன் கேட்கறே? முதல்ல இதைச் சொல்லு. அந்தத் தென்றல் சரித்திரத் துல எம்.பில்லா...?"

"ஆமாம், ஏன்?"

"ஏண்டா நீ முதல்லேயே சொல்லலை?"

"எங்க சொல்ல விட்ட? சரி, எங்கயிருந்து இதைத் தெரிஞ்சுகிட்ட?"

அவன் முழுவிபரம் சொன்னான்.

"அதனால என்னடா. நான் வேணும்னா வந்து சொல்றேன். தென்றல் உனக்கு நல்லா உதவி செய்வா. ரொம்ப புத்திசாலிப் பொண்ணு."

"எப்படிடா. அவளைப் பத்தி என்னென்னவோ சொல்லிட்டு அவகிட்ட போய்..."

"என்கிட்டதானே சொன்னே. அவகிட்ட இல்லையே."

"இருந்தாலும்..."

"அட, இப்படியே சொல்லிக்கிட்டு தயங்கினா, வேலைக்கு உதவாது. இரு. நானும் வரேன். அவங்க வீட்ல போய்ப்



பேசுவோம்." என்றவன் ஆட்களைக் கூப்பிட்டு பரபரவென்று கட்டளைகளைப் பிறப்பித்து விட்டுக் கிளம்பினான்.

"உன் ஆளைப் பார்க்க இது ஒரு சாக்கு. சரி. நான் ஏன் தடுக்கணும்." ரவி வார, தியாகு சிரித்தான்.

ரவி எதிர்பார்த்ததற்கு மேலாக, தென்றல் வீடு பிரும்மாண்டமாய் இருந்தது. பெரிய மதிலும் கேட்டுமாய்த் தாண்டியவுடன் திறந்தவெளி முற்றம். திண்ணையுடன் கூடிய வாசல்படி. நிறைவாய் அழகாய் அவற்றை அலங்கரிக்கும் கோலம் முற்றம் நிறைய தானியம் ஒருபுறம் – கோதுமை, கம்பு என்று காயவைக்கப் பட்டிருந்தது. இரண்டு படிகளைக் கடந்தவுடன் மொசைக் போட்ட முன் வராந்தா, தாண்டினால் பெரிய ஹால். நடுவே மழுமழு தேக்கு மரத்தில் ஊஞ்சல். ஹாலின் ஒரு ஓரமாய் சோபா செட். மறுபுறம் டி.வி.ஸ்டீரியோ. சுவரில் வரிசையாக சட்டமடிக்கப்பட்டு மாட்டப்பட்ட படங்கள்... குடும்பப் படங்கள், தெய்வப் படங்கள், லியோ காபி காலண்டர்...

தியாகு உள்ளே நுழைவதைப் பார்த்தவுடனேயே சிரித்த முகத்துடன் வேலையாட்கள் உள்ளே இவன் வருகையை அறிவிக்க ஓடிவிட்டார்கள்.

ஹாலில் இவர்கள் நுழையும் போதே குடும்பமே வரவேற்க கூடிவிட்டிருந்தது.

"வாங்க மாப்பிள்ளை வாங்க." வாய் நிறைய வரவேற்றார்கள். ரவியையும் அறிமுகம் இல்லாவிட்டாலும் ரொம்பப் பழகியவன்போல் வரவேற்றார்கள்.

"வீட்ல செஞ்சது" என்று அசோகாவும் முறுக்கும் கறந்த பாலில் காப்பியும் கொடுத்து உபசரித்தார்கள்.

தன் வருங்கால மனைவி இளவேனிலை அழைத்து ரவிக்கு அறிமுகப்படுத்தி வைத்தான் தியாகு. பின், மெல்ல வந்த விஷயத்தைச் சொன்னான்.

நிதானமாய்க் கேட்டுக் கொண்ட நமசிவாயம் சற்று மௌனமாய் யோசித்தார். அவர் நன்கு யோசிக்கட்டும் என்று நினைத்த தியாகு, மெல்ல, ''ரவி கூட கேட்கத் தயங்கினான். நான் தான் தைரியமா உங்ககிட்ட இந்த உதவி கேட்டு வந்தேன். நல்லா யோசிச்சு நிதானமா பதில் சொன்னாப் போதும் மாமா. அத்தைகிட்ட கலந்துகிட்டு பிறகு சொல்லுங்க.'' என்றபடி கைகூப்பி எழுந்தான்.

''அட, இதுல யோசிக்க என்ன இருக்கு மாப்பிள்ளை?

அதுவும் நீங்களே வந்து சொல்லும்போது... தம்பியும் நல்லவாரத் தான் தெரியறாரு. நல்ல படிப்பு... தம்பி படிச்ச தெல்லாம் சென்னையிலயேவா? அப்பா என்ன செய்யறாரு?''

''அப்பா வேணுகோபால்னு இன்கம்டாக்ஸ் டிபார்ட் மெண்ட்ல அஸிஸ்டெண்ட் கமிஷனர்.'' அவன் சொல்ல, அவர் யோசிச்சார், பின்,'' உங்க பூர்வீகம் தஞ்சாவூரா? மைலாப்பூர்ல தானே வீடு?...'' என்று பளிச்சென்று கேட்டார்.

''ஆமாம்'' ஏதோ ஜோசியம் போல் சொல்கிறாரே என்று அதிசயித்தான்.

''அப்படிப் போடு அருவாள. நம்ம வேணு பிள்ளையாப்பா நீ! உங்கப்பாவும் நானும் பால்ய நண்பர்கள். நான் என் சிறு வயசுல எங்க பெரியப்பா வீட்ல தஞ்சாவூர்ல தங்கிப் படிச்சேன். உங்கப்பனும், என்னோட படிச்சான். எஸ்.எஸ்.எல்.சி வரை ஒண்ணாப் படிச்சோம் - இப்ப நீயும் மாப்பிள்ளையும் மாதிரி.'' குதூகலமாய்ப் பேசிக் கொண்டே போனார் நமசிவாயம்.

சட்டென்று ரவிக்கு பொறிதட்டியது. மழூவூரில் தன் நண்பனைப் பார்க்கச் சொல்லி அப்பா சொன்னது இவரைத் தானா? பேர்... ம் நமசிவாயம் என்று தானே சொன்னார்?

''என்ன தம்பி யோசிக்கறீங்க?''

''இல்ல, அப்பா கூட உங்களைப் பத்தி சொன்னார். மழூவூர்ல நண்பர் இருக்கார்னு சமீபத்துல ஒரு கல்யாணத்துல சந்திச் சோம்னு கூட சொன்னார்.''



''ஆமாம்... ஆமாம். வேணு நல்ல இருக்கானா? பொண்ணு நிச்சயத்துக்குக் கூட வரச் சொல்லியிருக்கேன்.''

''வாஹணும்னு அவரும் சொல்லிக்கிட்டு இருந்தாரு.''

தன் நண்பன், தன் வருங்கால மாமனார் குடும்பத்திற்கு வேண்டப்பட்டவனாய்ப் போனதில் தியாகுவுக்கும் திருப்தி. வந்த வேலை எளிதில் முடிந்து விடுமே.

''அப்ப, கிளம்பறோம் மாமா. நீங்க நிதானமா யோசிச்சு சொல்லுங்க. வேலையப் பாதியில விட்டுட்டு வந்திருக்கேன்.''

''யோசிக்க என்ன மாப்பிள்ளை இருக்கு. நீங்களே வந்து சொல்றிங்க. வேண்டப்பட்ட பிள்ளையா வேற போயிட்டாரு. பிறகென்ன? படிப்பு விஷயமா நம்ம தென்றல் உதவப் போறானா நான் குறுக்கவா நிப்பேன். என்ன, நாலு கோயிலுக்கு அழைச்சுக் கிட்டுப் போகப் போறாரு. அவ்வளவுதானே தாராளமாச் செய்யட்டும்.

''தென்றல் எங்கே? அவளையும் ஒரு வார்த்தை கேட்டு டலாமே.''

''அவ திருமழப்பாடி கோயிலுக்குப் போயிருக்கா. இப்பத் தான் போறா.''

ரவி முகம் மலர, ''நல்லதாப் போச்சு. நானும் போகட்டுமா? அந்தக் கோயிலை கொஞ்சம் கவர் செஞ்சுட்டே வந்துடலாம். வரியா தியாகு?''

''எனக்கு வேலை இருக்கேடா'' தியாகு தயங்கினான்.

''பரவாயில்லை தம்பி. நீங்க போயிட்டு வந்துடுங்க. இங்கிருந்து மழப்பாடி இருபது நிமிஷம் தான். ஆனா, ரொம்ப பொழுது போறதுக்குள்ள வந்துடுங்க. இது கிராமம். நாலு பேர் நாலு விதமா நாளைக்குப் பேசிடக் கூடாது.'' நமசிவாயம் நயமாச் சொல்ல, ரவி தலையாட்டி விட்டுக் கிளம்பினான்.

"பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து மின்னார் செஞ்சடை மேல் மிளிர்க் கொன்றை அணிந்தவனே. மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே?"

ரவி சன்னதியை எட்டும் முன்பே தேனினும் இனிய ஒரு குரல் பாடும் தேவாரப் பாடல் அவன் செவியை எட்டி 'வாவா' என்று உள்ளே அழைத்தது. இத்தனை இனிமையாய் ஒரு குரலா? அதுவும் அதுவரை தேவாரப் பதிகங்களை ஓதுவாரே பாடக் கேட்டவன், முதல் முறையாய் ஒரு இனிய பெண் குரல் பாடக் கேட்டவுடன், - தேடி வந்த தென்றலைப் பார்ப்பதையும் விட்டு - ஆவலாய் சந்நிதிக்குள் போனான்... பாடும் நபரைப் பார்க்க.

அவன் முற்றிலும் எதிர்பார்க்காத அதிசயமாய்ப் பாடிக் கொண்டு நின்றதே தென்றல் தான்! வாய்ச் சாண்டைக்காரி இவ்வளவு அழகாகப் பாடவும் செய்வாளா?

பட்டுப் பாவாடை தாவணியில், தலையை இடைவரை பின்னி ஜாதி மல்லி சூடி, மருதாணி விரல்களை தாமரை மொக்காய்க் குவித்து கண்மூடி மெய் உருக உதடு மட்டும் அசைய அந்த உருக்கத்துடன் பாடிக் கொண்டிருந்தாள், தென்றல்.

தெய்வீக சன்னதியில் பக்திப் பாடல் மெய் உருக்க அவளை இந்தக் கோலத்தில் பார்த்தவன் ஒரு நிமிடம் ஆடித் தான் போனான். தான் முதல் பார்வையில் வெறுத்த பெண்ணுள் இத்தனை திறமைகளா? தெய்வத்தைப் பார்ப்பதை மறந்து அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

கண்விழித்து தீப ஆராதனையை ஒற்றிக் கொண்டவள் புஷ்பக் கூடையை பெற்றுக் கொண்டு திரும்பும் போது இவனைப் பார்த்தாள்.

ஒரு நொடி, 'அட நீயா?' என்றது பார்வை. அது ஆச்சர்யமா வெறுப்பா என்று இனம் பிரிக்கும் முன் அவள் அங்கிருந்து மறைந்து விட்டாள்.



அவசரமாய்ப் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு அவள் பின்னே ஓடியவன், பிரகாரத்தில் அவளைப் பிடித்து விட்டான். மெல்ல "தென்றல்" என்றான்.

அவன் அழைத்தவுடன் வீணையின் மீட்டலாய் அவள் உயிர் துடித்தது. சே, இதென்ன உணர்வு! அவன் உன்னை விரும்ப வில்லை. தனக்குள் சொல்லிக் கொண்டவள் முகம் இறுக திரும்பி என்ன என்பது போல் பார்த்தாள்.

"உங்களைப் பார்க்கத்தான் கோயிலுக்கே வந்தேன்" என்றான். ஒரு நிமிடம் அவளுள் பட்டாம்பூச்சிகள் சிறகடித்தன. அவன் சுருக்கமாய் விவரம் சொல்ல, சப்பென்றானது.

இவ்வளவுதானா என்று பார்த்தவள். "அதுக்கென்ன? இந்தக் கோயில் பத்தியே முதல்ல பார்க்கலாமே. உங்களுக்கே தெரிஞ்சிருக்கும் ஆர்க்கிடெக்சரல் ஸ்கில்னு பார்த்தா, இந்தக் கோயில் கூட ஒரு அருமையான உதாரணம். இரண்டு அடுக்கா கட்டியிருக்காங்க. கொள்ளிடத்துல வெள்ளம் புகுந்து கீழ்மட்ட கோயில் மூழ்கிடும். அப்ப மேல் மாடத்துல இருக்கற ஸ்வாமிக்குத்தான் பூஜை நடக்கும். வாங்க பார்க்கலாம்..."

அவள் ஒவ்வொன்றாய் விளக்கி, கல்வெட்டுக்களை அனாயாசமாய்ப் படித்து குறிப்புகள், - குறிப்புக்களோடு அதனைச் சார்ந்த சரித்திர நிகழ்வுகளையும் வருட வாரியாக சொல்ல, அவன் நிஜமாகவே அசந்து போனான்.

இரவு.

'உன்னை நினைக்காத அவனை, நீ நினைக்காதே, மனமே' என்று சொல்லி, புத்தகத்தில் வலுக்கட்டாயமாய் புத்தி செலுத்தி அயர்ந்து தூங்கிப் போனாள் தென்றல்.

ஆனால், அவள் திறமை தந்த பிரமிப்பில் அவன் சுத்தமாய்த் தூக்கம் தொலைத்திருந்தான்.

# 6

நீ தானா அது?
முன்ஜென்மம் என்.
மனம் தொட்டுப் போனது?
நீ தானா அது
முன் ஜென்மம் என்
உயிர் உரசிப் போனது?
நீ தானா அது?
முன் ஜென்மம் என்
உடல் தழுவி நின்றது?

ரவிச்சந்திரனும் தென்றலும் நிறையக் கோயில்களுக்குப் போனார்கள். பொன் கூரை வேய்ந்த தில்லைச் சிற்றம்பலம், பாடல் பெற்ற கமலாலயம் தியாகேசர் கோயில், திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, சாத்தனூர், செம்பியன்குடி என்று பல கோயில்களுக்குப் போய் வந்தார்கள். ஒரு கோயிலில் ஒரு முழுநாள் செலவிடும் அளவு அவளிடம் செய்திகளும், கல்வெட்டு படிக்கும் திறமையும் இருந்தது. அன்று... திருவையாறு கோவிலுக்குச் சென்று விட்டு, தியாகராஜர் சன்னதிக்குப் போனார்கள். ஆற்றங்கரை மணற்பரப்பில் அமைதியாய் வீற்றிருந்தார் தியாகய்யர். ஏகாந்த சூழலில் அவள் தன்னைத் தொலைத்திருந்தாள். திடீரென்று "இங்க வந்தா ரெண்டு பாட்டு பாடுவேன். உங்களுக்கு ஒன்றும் தொந்தரவு இல்லையே?" அவள் கேள்வி அவனை உசுப்பியது.

அவளை வினோதமாய்ப் பார்த்தான். அவன் தியாகுவோடு பேசியது அவள் மனதைப் புண்படுத்தியிருப்பது அவனுக்குத் தெரியாது. தியாகு அறிமுகம் செய்தபோது தென்றலுக்குப் பதில் புயலென பெயரிட்டிருக்கலாம் என்று தான் சொன்னதை அவள்



மனதில் வடுவை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். பிராயச்சித்தம் போல் அவளோடு கோயில் கோயிலாகப் பயணிக்கும் ஒவ்வொரு முறையும் அவளை மிக மென்மையாகவே கையாண்டான். அவள் திறமை ஏற்படுத்திய பிரமிப்பு வேறு அவள் மேல் மதிப்பைக் கூட்டியிருந்தது. பழகும் போது அவளின் மென்மையான இனிய குணம் அவனை மேலும் ஈர்த்தது.

அதனால், "பாடுங்களேன். என்கிட்ட என்ன பர்மிஷன் கேட்கணுமா? கரும்பு திங்க கசக்குமா?" என்றான். அவனுள் ஏற்பட்டிருந்த மாற்றம் புரியாத அவள், அவனிடம் அதிகம் நெருங்காமல் ஒரு நல்ல வழிகாட்டியாய் மட்டுமே செயல் பட்டாள். தன் ஒவ்வொரு அடியையும் அவனைப் பாதிக்காத வண்ணம் எடுத்து வைக்கும் ஜாக்கிரதை உணர்வுடன் நடந்து கொண்டதின் காரணமாயத்தான், பாடக் கூட அவனிடம் அனுமதி வாங்கினாள்.

காற்று கூட அதிர்ந்து வீசாத அமைதி. அருகே ஆறு அமைதியாய் ஓட, மோனத்தைக் கலைக்கும் குயிலின் கூவலாக அவள் குரல் இனிமையாய் ஒலிக்கத் துவங்கியது.

"மாகேலரா விசாரமு மருகன்ன ஸ்ரீ ராமசந்திரா..."

இந்தப் பாடலுக்கும் அந்தச் சூழலுக்கும் ரொம்பப் பொருத்தம் இருப்பதாய் உணர்ந்தான் ரவி. நல்ல காற்றும், நீரும், திருப்தியும் அமைதியும் இருந்துவிட்டால் மனிதனுக்கு வேறு என்ன வேண்டும்? என்ன கவலை இருக்கப் போகிறது? நல்ல காற்றும் நீரும் உடல் ஆரோக்யம் தரும். திருப்தி - போதுமென்ற மனம் - மன அமைதியைத் தரும். திருப்தி. அமைதி இதெல்லாம் இருந்து விட்டால் போதும் என்று எத்தனை பேர் உணர்கிறார்கள்? சின்ன மனதில் எல்லையில்லா ஆசை. இது வேண்டும் அது வேண்டும் என்று பேராசை. ஒன்றிருக்க மற்றொன்றிற்கு ஏங்கும் குரங்கு மனம். எதிலும் திருப்தி அடைவதில்லை. அதனால், அமைதி

குலைகிறது. மன ஆரோக்யம் கெடுகிறது. அதன் காரணமாய் உடல் ஆரோக்யம் பாதிக்கப்படுகிறது. ஆசையே எல்லாத் துன்பத்திற்கும் காரணம் என்ற புத்தன் சொல் சராசரி மனிதன் மனதில் புகுவதில்லை. ஆனால், தியாகராஜர் போன்ற மகான் உணர்ந்திருக்க வேண்டும். அதனால் தான் அவரால் அமைதியாய் பக்தி மார்க்கத்தில் ஈடுபட முடிந்திருக்கிறது. சரபோஜி அரசன் பரிசை நிர்தாட்சண்யமாய் மறுத்து ராமனை மட்டுமே பாடுவேன் என்று உறுதியாய் நின்று முடிந்திருக்கிறது.

'எனக்கென்ன கவலை ஸ்ரீராமா?' என்று ஏழ்மையிலும் பாட முடிந்திருக்கிறது. பணத்திற்கும் சந்தோஷத்திற்கும் சம்பந்தமிருந்ததில்லை அதனால் தான் பாரதி ஏழ்மையிலும்'' எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!'' என்று மகிழ முடிந்திருக்கிறது.

காக்கை ஒன்று கடூரமாய்க் கரைய, எண்ணத்திலிருந்து விடுபட்டான். தென்றலின் இனிய குரல் அவனை இனிமையாய் சூழ்ந்தது. அதில் லயித்தான். அவள் பாடலைக் கேட்க மீண்டும் அவனுக்கு ஒரு வாய்ப்பு. மீண்டும் அந்தக் குரலும் இசை வீச்சும் அவனை பிரமிப்பில் ஆழ்த்தியது. படிப்பும் பாட்டும் கலந்த சரஸ்வதியாய் அவள் அவன் கண்களுக்குப் பட்டாள்.

''ஜககர்த்தி நாடகவித்ர முனு
ஜகமெல்ல மெச்சக காமுநதிடி
சதி தப்ப காடி ஞ் சேதவு லாம்மி
நத த்யாக ராஜ கிரீச விநுத''

பாடி முடித்து நமஸ்கரித்தாள். அவனும் குனிந்து தரை தொட்டு வணங்கி எழுந்தான். பிரகாரம் சுற்றி விட்டு வெளியே வந்தார்கள்.

''அப்படி மண்டை கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டுப் போகலாமா!

ஆற்றோரம் மாதிழலில் அமர்ந்தார்கள்.

''இங்கே ஆராதனைக்கு வந்திருக்கீங்களா? அப்பா, இப்படியா இருக்கும்! என்னு போட இடம் இருக்காதும்பாங்களே அப்படி



கூட்டம் இருக்கும். ஒவ்வொரு கல்லும் இசை பாடும். பெரிய பெரிய பாடகர்களெல்லம் கொஞ்சம் கூட பந்தா இல்லாம வந்து கலந்துப்பாங்க. ஊரே இங்கே தான் இருக்கும்.''

கண் முன்னே நடப்பது போல் அவள் விவரித்தாள். அவன் தலையாட்டி மறுத்தான்.

''எனக்கு இந்த ஏகாந்தம் தான் பிடிச்சிருக்கு. பெரிய பெரிய வித்வான்களை விட இந்த ஒத்தைக் குயில் குரல் ரொம்ப இனிமையா இருந்தது. இப்படிப்பட்ட ஒரு ஏகாந்தத்துல தான் தியாகராசரே எனக்கென்ன கவலை'னு பாடியிருக்கணும். ஆசை இல்லாம இயற்கையோடு ஒன்றிய மனசு அமைதியாயிருந்திருக்கு.''

அவள் பாடலை அவன் மறைமுகமாய்ப் பாராட்டியவுடன், அவள் ஒரு நொடி மகிழ்ச்சியில் திளைத்தாள். என்ன பதில் சொல்வது என்றே தெரியாமல் திகைத்தவள், அவன் பதிலுக்காகக் காத்திருப்பது போல் அவன் அவள் முகத்தையே நோக்கவும், தன் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

ஏதாவது கேட்க வேண்டுமே என்று, ''உங்களுக்குத் தெலுங்கு தெரியுமா?'' என்று கேட்டாள்.

''தமிழ், இங்கிலீஷ் ரெண்டு தவிர எதுவும் தெரியாது'' என்றவன் ஒரு நொடி தலையைக் குனிந்து கொண்டான். தங்கள் முதல் சந்திப்பில் ஆங்கிலம் தெரியாதவள் என்று நினைத்து அவளிடம் கிண்டலாகப் பேசியது நினைவில் ஓடியது. பிராயச்சித்தம் போல், கேட்டான்.

''உங்களுக்கு பல மொழிகள் தெரியும்னு கேள்விப்பட்டேன். தெலுங்கும் தெரியுமா?''

''கமாரா.''

''இப்பப் பாடின பாட்டோட சரணத்துக்கு என்ன அர்த்தம். 'ஜக'னு ஏதோ வருதே...''

''ம், உலக மாந்தரை ஜதை சேர்த்து, நாடகத்தின் சூத்திரக் கயிற்றைக் கையில் பிடித்து, உலகம் புகழும் படி நடை தவறாமல் ஆட்டிவைக்கிறாயே, ஸ்ரீராமா, அதனால எங்களுக்கு என்ன கவலைனு அர்த்தம் வரா மாதிரி எழுதியிருக்கார்.''

''க்ரேட்'' என்றவன் அடித்த காற்றால் கண் சுருக்கி, இமைக்காமல் அவளையே பார்த்தான். ஒரு நொடியில் மின்னல் போல் அவனுள் அந்த மாயம், மாற்றம். அவன் மனம் அவளை நோக்கி ஓடியது. கண்களில் வெளிப்பட்டது மனம். 'உன்னையும் என்னையும் ஜதை சேர்த்து வைப்பானா, அந்த ஸ்ரீராமன்' என்றது அவன் பார்வை. அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. குறும்பாய் மின்னிய அவன் பார்வை அவளை ஏதோ வகையில் கேலி செய்வதாய்த் தான் அவள் நினைத்தாள். அவன் மன மாற்றம் அவனுக்கே ஆச்சர்யமாய் இருந்தது!

''நாளைக்குத் தஞ்சை பெரிய கோயில் போறோம் தென்றல்'' வீட்டில் அவளைக் கொண்டு விட்டு விடைபெறும் போது நினைவுபடுத்தினான் ரவி.

''ஞாபகம் இருக்கு. ரவி.''

''குட் நைட்''

மெல்ல திரும்பிய தியாகு வீடு நோக்கி ரவி நடந்தான். பைக்கில் அவளை ஏற்றிக் கொண்டு ஊர் ஊராகப் போனால், அவள் பெயர் கெடலாம் என்ற காரணத்தினால், பஸ்ஸிலும், ஆட்டோவிலுமே அவளோடு பயணித்தான். அவள் கூட ஆரம்பத்தில்,

''உங்களுக்கு இது அதிக செலவே'' என்ற போதுகூட

''பரவாயில்லை தென்றல். சென்னையில இது சகஜம். கிராமத்துல நீங்க என்னோட தினமும் பைக்ல வந்தா, உங்களை நாறு விதமான பேச ஆரம்பிச்சுடுவாங்க. வேண்டாமே'' என்றான்.

அவன் கரிசனம் அவள் நெஞ்சைத் தொட்டது. என்ன இருந்து என்ன, அவன் மனதில் தான் இல்லையே என்ற ஏக்கம் எழத்தான் செய்தது.



இந்த இரு வாரமாய் அவனோடு கோயில் கோயிலாய் சுற்றும் போதும், அந்த ஏக்கம் விஸ்வரூபம் எடுத்திருப்பது என்னவோ உண்மை. எட்டாத மலைத் தேனுக்கு கிட்டாதென தெரிந்தது ஏன் ஆசைப்படவேண்டும்? மனதை கஷ்டப்பட்டு சாமாதானப்படுத்திக் கொள்ள நினைத்தாள். மனக் குரங்கு அவள் கட்டுப்பாட்டில் இருந்தால்தானே?

ரவியின் மனமும் ஒரு நிலையில்லாமல் தவித்தது. கண்டதும் காதல். முதல் அபிப்ராயமே சிறந்த அபிப்ராயம் என்பார்கள். இரண்டுமே அவன் வரையில் தவறாகப் போய்விட்டது. ஒரு சண்டைக் கோழியாய் தெருவில் நின்று கூப்பாடு போடும் வாயாடியாய் அவன் நினைத்திருந்த பெண் அல்ல அவள். படிப்பும், நாகரீகமும், அழகும், அடக்கமும், பாட்டும், திறமையும் ஒருங்கே இணைந்த பண்பான பெண். பழகப் பழக, அவளைப் பற்றிய பிரமிப்பு அதிகரித்ததே தவிர, சற்றும் தன் முதல் அபிப் ராயத்திற்குச் சாதகமாய் எதுவும் நடக்கவில்லை.

அவளை வீட்டில் விட்ட பின் ஒரு வெறுமை சூழ்கிறது. அதுவரை கேட்ட இனிய வீணை இசை திடீரென்று தந்தி அறுந்ததால் நின்று போனால் ஏற்படும் வேதனை எழுகிறது. மறுநாள் அவளைச் சந்திக்கும் வரை மனம் அலைபாய்கிறது. கண்டவுடன் குதூகலிக்கிறது. வெறுப்பு எப்படி விருப்பாய் மாறியது. எப்போது மாறியது?

இதுதான் காதலா? தியாகு விரும்புவது போல் தென்றல் தான் தனக்கு ஏற்ற துணையா? அப்பா ஆசைப்பட்டபடி அவர் நண்பர் மகளையே மணக்க சம்மதம் என்று சொல்லிவிட்டால், அடுத்த முகூர்த்தத்தில் தென்றலோடு திருமணம் தானே? நானா, நானா இப்படி மாறிப்போனேன்? இத்தனை வருடங்களாய், எந்தப் பெண்ணையும் நினைக்காதவனா ஒரே வாரத்தில் மாறினேன்? இனிய நினைவுகளும் சுகமான கனவுகளுமாய்த் தூங்கிப் போனான் ரவி.

முற்றத்துக் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தவன் முன் வெள்ளையில் ஜரிகை இழையோட பட்டுப்புடவையும் முத்து நகையும் முல்லைப் பூவுமாய் தென்றல் வந்து நின்று புன்னகைத்த போது முதலில் கனவு என்றுதான் நினைத்தான் ரவி.

''குட் மார்னிங். என்ன தஞ்சாவூர் போக வேண்டாமா? இன்னும் எழலையா?''

''ஓ! நாழியாயிடுச்சா?'' வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

''இல்ல. இல்ல. இன்னும் நேரமாகலை. நிதானமா எழுந்து கிளம்புங்க. நானும் என் அக்காவும் பாவை நோன்பு நேர்ப்பது வழக்கம். இன்னைக்குக் கூடாரை வல்லினு...''

''பாவை நோன்புன்னா? எது. அதிகாலையிலேயே எழுந்து ஆண்டாளோட திருப்பாவை பாடல்களைப் பாடறதா? நல்ல கணவன் வேணும்னு வேண்டிப்பாங்களே அதா?''

''ம்'' அவள் விளக்க முடியாமல் ஒரு நொடி தலைகுனிந்து முகம் சிவந்தாள்.

''அதே தான்டா'' என்றபடி அங்கு வந்த தியாகு,'' இவ அக்கா வேண்டுதல் நிறைவேறிடுச்சு. இன்னும் இவ வேண்டுதல் தான் அடுத்து நிறைவேறணும்'' என்றான், அர்த்தத்தோடு இருவரையும் பார்த்தபடி.

தென்றலால் தலை நிமிர முடியவில்லை. மெல்ல நகர்ந்தபடி பேச்சை மாற்றும் விதமாக, ''கூடாரை வல்லினு சர்க்கரைப் பொங்கல் செஞ்சோம். எடுத்து வந்திருக்கேன். உங்களுக்கு அக்கா கொண்டு வந்தாத்தான் இனிக்கும். மாமா. இருந்தாலும் என்ன செய்ய? அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க'' என்று தியாகுவை வாரிவிட்டு உள்ளே போனாள்.

''அதெல்லாம் அவனுக்குத்தாங்க. தேவதை மாதிரி நீங்க கொண்டு வந்து கொடுக்கறது எனக்கு இனிக்கும். பல் தேய்ச்



சுட்டு ஒரு பிடி பிடிக்கலாம்.'' சொல்லியபடி பின்பக்கம் ஓடினான் ரவி.

அவளுள் அவன் வார்த்தைகள் தேனாய் இறங்கின. அவன் சாதாரணமாய்ச் சொல்வது என்னுள் ஏன் இப்படி இன்ப மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தன்னையே நொந்து கொண்டாள். அவளைத் தொடர்ந்து வந்த தியாகுவோ அவளைச் சீண்டும் வகையில், ''என்ன, என்னவோ''தேவதை'' இனிப்பு'னு எல்லாம் சொல்லிட்டுப் போறான். உன் பாவை நோன்புக்கும் பலன் கிடைச்சுடுச்சா என்ன?'' என்றான். குரலில் கேலி இருந்தாலும், அதையும் மீறிய ஒரு ஆவலும் கரிசனமும் இருந்தது.

'ஆமாம், மாமா. உண்மைதான். என்று சொல்ல முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும், என்று நினைத்துக் கொண்டவள் முகத்தில் சிரிப்பை மாட்டி அகத்தை மறைத்துக் கொண்டாள்.

''நீங்க வேற, சும்மா இருங்க, மாமா. அவரு. நான் வெள்ளைப் பட்டுப்புடவையில வந்திருக்கிறதை கேலி செஞ்சுட்டுப் போறாரு. அதப் போயி ஏதோ சொல்லிட்டு. சரி, நான் போயிட்டு இன்னும் ஒரு மணி நேரத்துல திரும்பி வரேன். தஞ்சாவூர் போகலாம்னு சொல்லி வைங்க. ''தியாகுவின் அம்மாவிடம் விடைபெற்றுக் கிளம்பினாள் தென்றல்.

## 7

வேல் விழியால் என்
நெஞ்சை பிளந்தாய்!
கருநாகக் கூந்தலால் என்னைக்
கட்டிப் போட்டாய்!
உன் மனதினிலே என்னை
ஆயுள் கைதியாக்கினாய்! இருந்தும் நான்
உன்னை நேசிக்கிறேன்!

தஞ்சை கோயில் பெருவுடையா சன்னதிக்கு அருகே பக்க வாட்டில் சட்டென தென்படாத படிகளை ஏறினால், கோபுரத்தின் முதல் தளத்தில் இருக்கலாம். சன்னதிக்கு நேர் மேலே சுவரெல்லாம் ராஜராஜன் காலத்து ஓவியங்களும் சிற்பங்களும் மன்னன் புகழ் பாடி நிற்பதைப் பார்க்கலாம்.

நாட்டிய சாஸ்திரத்தின் 108 கர்ணங்களை வடிக்கத் துவங்கி கடைசி சில கர்ணங்கள் வடிக்கப் படாமல் நிற்பது முதல், கருவூரார் - ராஜராஜன், ராஜகுல பெண்கள், அர்த்தநாரி போல் பாதி சரஸ்வதி பாதி லட்சுமி என்று சுவரில் தீட்டப்பட்ட ஓவிய வரிசைகள் வரை வாய் பிளந்து பார்த்துக் கொண்டு நின்றான் ரவிச்சந்திரன்.

''மை காட், மைகாட்! எத்தனையோ முறை தஞ்சை வந்திருக்கேன். இப்படி கோபுரத்துக்குள்ளே கலைநயம் இருப்பதே தெரியலையே. இதுவரை வந்ததில்லையே'' ரவிக்கும் சொல்லி மாளவில்லை.

''நிறையப் பேருக்கு - ஏன் தஞ்சை வாசிகளுக்கே கூட தெரியாது. ஆர்க்கியாலஜி டிபர்ட்மெண்ட் பர்மிஷன் இல்லாம மேலே வரமுடியாது. உங்களுக்காக நான் ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கியிருக்கேன்.''

''சரஸ்வதி மகால்ல யாரோ இதைப்பத்திச் சொன்னாங்க. அப்ப இதை நான் சீரியஸா எடுத்துக்கலை. இப்ப உங்களால எனக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைச்சது. தேங்க்யூ சோ மச் தென்றல்.''

''தேங்க்ஸ் இருக்கட்டும். கோபுரத்தை வெளியே இருந்த தானே பார்த்து ரசிச்சிருக்கோம். இப்படி வந்து பாருங்க.''

நாலு பக்கமும் கம்பி போடப்பட்டிருந்தது. கீழே எந்தப் பள்ளமும் இல்லாமல் நடுவே தடுப்பாய் எதற்கு இந்தக் கம்பித் தடுப்பு என்பது அவனுக்குப் புரியவில்லை. தென்றல்தான் விளக்கினாள்.



''இந்த இடத்துக்குக் கீழே தான் பெருவுடையார் இருக்கார். அதான், அவர் மேலே கால் படறாமாதிரி நாம நடந்துடக் கூடாதுனு இப்படித் தடுத்திடுக்காங்க. அப்படியே மேலே பாருங்க.''

நிமிர்ந்து பார்த்தவன் ஒரு நிமிடம் அந்த அற்புத காட்சியில் அசந்து நின்றான். கோபுரத்தின் உட்பகுதி எந்த கற்களோ இரும்பு கம்பிகளோ குறுக்கே இல்லாமல் கோன் ஐசின் கோனைத் திருப்பி வைத்தது போல் அடுக்கடுக்காய்ப் போய் உச்சியில் குறுகி இருட்டாய் முடிந்தது.

''இந்த விமானம் திராவிட முறையில் கட்டப்பட்டது. இல்லையா?''

''ஆமாம், கிட்டத்தட்ட 216 அடி உயரம். 14 அடுக்குகள். கலசம் மட்டுமே பன்னிரண்டரை அடி.''

மெல்ல வெளியே வந்தார்கள்.

''மெய்கீர்த்தினு தன்னோட காலத்துலயே தன்னோட சாதனைகளை கல்வெட்டா வடிக்கற பழக்கம் ராஜராஜன் காலத்துலதான் ஆரம்பிச்சது. எவ்வளவு பெரிய விஷயம் இது! இல்லாட்டி நமக்கு இப்படிப்பட்ட மாபெரும் அரசர்களைப் பத்தி தெரியாமலேயே போயிருக்கும்.''

''இங்க ராஜராஜனோட 64 கல்வெட்டுக்களும் ராஜேந்திர சோழனோட 29 கல்வெட்டுக்களும்...''

''தெரியும். எபிகிராபி டிபார்ட்மெண்ட் வெளியிட்ட சவுத் இண்டியன் இன்ஸ்கிரிப்ஷன்ஸ் எல்லாம் பார்த்து ரெபர் பண்ணிட்டேன். நான் குறிச்சிக்கிட்டு வந்திருக்கும் சில கல் வெட்டுச் செய்திகள் எங்கே இருக்குனு பார்த்து, அதை அப்படியே நீங்க எழுதித் தாணும். போட்டோ எடுத்துக்க பர்மிஷன் வாங்கி யாச்சு இல்ல?''

"ஓ!" என்றவள், அவன் குறிப்பிட்ட கல்வெட்டுக்களுக்காகப் பார்த்தபடி பிரகாரம் சுற்றினாள். அவனும் தொடர்ந்தான்.

"அருமையான கோயில். நான் மட்டும் இங்கே இருந்திருந்தா. தினம் கோயிலுக்கு வாரம இருக்க மாட்டேன். ஏன் கும்பலே இல்லை."

"தன்கிட்ட இருக்கற பொருளோட மதிப்பு யாருக்குமே தெரியறதில்லை. நல்ல நாள் கிழமைனா கொஞ்சம் கும்பல் வரும். மத்த நாளெல்லாம் பிரகதீஸ்வரர் ஏகாந்தமாத்தான் இருப்பார். ஏதோ பார்க்குக்கு வரா மாதிரி சில காதலர்களுக்கு இது மீட்டிங் ஸ்பாட். அவ்வளவுதான்." தென்றல் குரலில் வருத்தம்.

"தஞ்சை நல்ல ஊர். எனக்கு ரொம்ப பிடிக்கும். அதுவும் ஒரு முறை நான் ஆறாவது ஏழாவது படிக்கும்போது தஞ்சை வந்ததேன். அப்போ தான் பொன்னியின் செல்வன் படிச்சு முடிச்சிருந்தேன். அதுக்கும் முன்னாடி ரொம்பச் சின்னப் பிள்ளையா தஞ்சாவூர் வந்தது. சரியா மனசில பதிஞ்சதில்லை. ஆனா, ஏழாவது லீவுல வந்த போது - பொன்னியின் செல்வன் படிச்ச பாதிப்பு பாருங்க - தஞ்சை அப்படியே மனசில ஒட்டிடுச்சு. வந்தியத் தேவன் மாதிரியே தான் ஊரையும் ஆறையும் வேடிக்கை பார்த்துக்கிட்டே வந்தேன்.

"உண்மைதான். நல்ல எழுத்துக்கு மனசை பாதிக்கும் சக்தி உண்டு" என்றவள் முதல் முறையாய் அவள் அவனைச் சந்தித்த போது தானும் பொன்னியின் செல்வனைத் தான் படித்துக் கொண்டிருந்தோம் என்று நினைத்தாள். வந்தியத்தேவனைப் போலவே - வண்டியை மோதியதால் - அசடு வழிந்த ரவியின் முகம் நினைவில் வர, களுக்கென்று சிரித்து விட்டாள்.

"ஏன்?" என்றான் அவன்.

அவள் விளக்கினாள்.



சிரித்த அவன், "சேச்சே, நான் ஆயிரம் வருஷங்களுக்கு முன் வந்தியத் தேவனெல்லாம் இல்லீங்க."

"பின்ன யாராம்?"

"இந்த பிரும்மாண்டமான கற்கோயிலை, கலைக் கோயிலை எழுப்பிய..."

"சிற்பியா?" வேண்டுமென்றே அவள் சீண்ட, அதைப் பொருட்படுத்தாமல் குறும்பாய், "ராஜராஜசோழனே நான்தான்" என்றான்.

"அப்ப, நான் என்ன வானதியா?" தன்னை மீறி அவசரமாகச் சொன்னவள், நாக்கைக் கடித்துக் கொண்டாள். குங்குமமாய்ச் சிவந்த முகத்தை அவளால் நிமிர்த்த முடியவில்லை.

அந்த இரவு இருவருக்குமே தூக்கம் வரவில்லை. தென்றலுக்கு துக்கமும் அவமானமும் வெட்கமும் அலைக் கழித்தன.

'சே, என்னை நேசிக்காத ஒருவரை நான் நேசிப்பதை இப்படியா மறைமுகமாய் வெளிப்படுத்தித் தொலைப்பேன். என்ன பெண் நான்! ஏற்கனவே என்னைப் பற்றி நல்ல அபிப்ராயம் ரவிக்குக் கிடையாது. இப்படி என்னை வெளிப்படுத்திய பின், என்னைப் பற்றி எவ்வளவு கீழ்த்தரமாய் நினைப்பார். அலைகிறேன் என்று நினைப்பாரோ?"

'ஒருவேளை என்னைப் பற்றி நல்ல அபிப்ராயம் இந்த இரண்டு வாரங்களில் ஏற்பட்டிருக்குமோ? இந்த சில நாட்களாய் மென்மையாகத் தானே பழகுகிறார். ஆனால், அது என் அறிவின் மேல் அவர் கொண்ட மதிப்பாய் இருக்கும் அவ்வளவுதான். உடன் பணிபுரிபவர் மேல் காட்டும் ஒரு 'அபிஷியல்' கரிசனம் அவ்வளவுதான். அந்த நல்ல அபிப்ராயம் கூட இன்றைய ஒரு வரி வெளிப்பட்டால் குலைந்து போயிருக்கும்.'

'ஏன் அப்படிப் பேசித் தொலைத்தேன்?"

'பிற்காலத்தில் ஒருவேளை சந்திக்க நேர்ந்தால் கூட, மனைவியிடம், 'இவளுக்கு என் மேல ஒரு கண் தெரியுமா?' என்று கூறி நகைப்பானோ!

'சே, மனசு எதையெல்லாம் நினைக்கிறது. நா எதையெல்லாம் பேசிவிடுகிறது.

வருத்தமும் கோபமும் அவளை வாட்ட, தூங்காமல் புரண்டாள்.

ரவியோ சந்தோஷத்தால் தூக்கத்தை தொலைத்திருநதான். அவன் வீடு வந்தவுடனேயே, ''டேய், உங்கப்பா போன் பண்ணினாரு. அடுத்த வாரம் நடக்கற என் நிச்சயதார்த்தத்துக்கு வராங்களாம்.''

''நல்லதாப் போச்சு'' 'அப்பா உங்க நண்பர் மகளையே கல்யாணம் கட்டிக்கறேன்' என்று சுலபமாய்த் திருமணத்தை நடத்திக் கொண்டு விடலாம். அதுவும் தென்றல் மறைமுகமாய் தன் மனதில் இருப்பதை வெளிப்படுத்தி விட்டாள். பிறகென்ன?

''என்னடா நல்லதாப் போச்சா? உங்கப்பாவும் இளவேனில் அப்பாவும் நண்பர்களாம். அதனால, அவங்க வீட்லதான் தங்கு வாங்களாம். நம்ம வீட்ல தங்க வேண்டாமா?''

நண்பனின் முகத்தை ஆராய்வது போல் பார்த்தான் ரவி. அப்பா போல் தென்றலோடு இணைத்துப் பேசியவன் இவன். இவனிடம் சொல்லிவிடலாம், தப்பென்ன?

''தங்கட்டுமே, வருங்கால சம்பந்தி வீட்ல தானே தங்கறாங்க''

ஒரு நொடி புரியாமல் விழித்த தியாகு, புரிந்து கொண்ட வுடன் ''டேய்'' என்று கூவிக் கொண்டு ரவி அருகே அமர்ந்து அவன் கை பற்றினான். வாயெல்லாம் பல்லாக, ''என்னடா சொல்றே? நிஜமா!'' என்று கேட்டான்.

சில நாட்களாகவே தன் மனதில் தென்றல் வீசுவதையும், மறைமுகமாய் அவள் தன் காதலை வெளிப்படுத்தியதையும்



அப்பா வந்தவுடன் சம்பந்தம் பேசச் சொல்லப் போவதையும் கூறினான்.

''பெரிய ஆளுடா நீ. முதல்ல என்னவோ அப்படிப் பேசின. இப்பப் பாரு. தலைகீழா மாறி நிக்கற. காலையில தேவதைனு நீ அவளைச் சொல்லும் போதே யூகிச்சேன்... என் நண்பனே எனக்கு சகலையாகப் போறான். டோய்.''

குஷியில் ரவியை விட தியாகு கூத்தாடினான்.

''சரிடா, இப்ப நீ இருக்கிற நிலைல உனக்கு பாலும் கசக்கும் படுக்கையும் நோகும் தான். இருந்தாலும் எழுந்து வா சாப்பிட. கம்பந்தோசை சாப்பிட்டிருக்கியா?''

''நாத்துக் கிழவா, நீ என்னை கேலி பண்ணறியா, போடா''

கம்பந் தோசை நன்றாகத் தான் இருந்தது. ஆனாலும், தியாகு சொன்னதுபோல், ரவிக்குத்தான் எந்த சுவையும் புலனுக்கு எட்டவில்லை. காற்றில் மிதப்பது போல் சுகமாய் இருந்தது. ஏதோ ஒரு வித போதையில், கனவில் நடப்பது போல், சுற்றி இருப்பவரெல்லாம் பொய் போலவும், அங்கு இல்லாத தென்றல் தன் அருகே இருப்பது போலவும் தோன்றியது.

படுத்தவுடன் தூங்கும் இயல்புடையவன். அன்று தென்றல் பற்றிய உல்லாச நினைவில் சுத்தமாய்த் தூக்கம் தொலைத்தான்.

## 8

சூரிய வரவிற்காக
காத்திருந்தாய்
சூரிய காந்திப் பூவே!
இப்போது சூரியன் வந்துவிட்டான்.
உன் பக்கம் நோக்கி யாசிக்கும்

இந்தச் சூரியப் பார்வை
தவிர்த்துப் போவதும் ஏன் பூவே?.

சல்சல் என்று மாட்டு வண்டி ஒன்று அந்த ஒற்றையடிப் பாதையில் ஓடிக் கொண்டிருந்தது. இருபக்கமும் வயல் வெளிகள். மாட்டு வண்டி பின்னே வந்த சுமோ வண்டியால் மாட்டு வண்டியை ஓவர் டேக் செய்ய முடியாத அளவு குறுகிய பாதை. வழித்தடமும் குண்டும் குழியுமாய் இருந்தது.

வண்டிக்குள் தியாகு குடும்பத்தினர் இருந்தனர். அன்று மாலை தியாகுவுக்கும் இளவேனிலுக்கும் நிச்சயதார்த்த நிகழ்ச்சி என்பதால், காலை அருகிலுள்ள எசனைக் கோயிலுக்கு தங்கள் குல தெய்வத்தை வழிபடக் கிளம்பியிருந்தார்கள். மார்கழி முடிந்து தை ஆரம்பம் தான் என்றாலும், பத்து மணி வெய்யில் காருக்குள் புழுக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அதுவும் வண்டி வேகமாகச் செல்லாமல் ஊர்வதால், வெம்மை அதிகமாகவே தெரிந்தது.

வயல்வெளியில் ஆங்காங்கு ஷெட் அடித்து, அறுவடையான கரும்பை வெல்லமாய்க் காய்ச்சி கொண்டிருந்தார்கள்.

''தியாகு, கொஞ்சம் வண்டியை நிறுத்தச் சொல்லு. அந்த ஷெட்ல தண்ணி கேட்கலாம்.'' தியாகுவின் மாமா சொல்ல, கார் நின்றது.

அவர்கள் கேட்டதென்னவோ தண்ணீர். ஆனால், அந்த நல்லிதய விவசாயிகளோ சொம்பு சொம்பாக கரும்புச் சாறை நீட்டினார்கள்.

''குடிங்க சாமி''

ஏழெட்டு சொம்பு கரும்புச் சாறு! ரவிச்சந்திரன் அசந்துதான் போனான். காசு கொடுத்தவுடன் வாங்க மறுத்துவிட்டார்கள்.

''என்னடா ரவி அசந்துட்டே. இதுதான்டா கிராமம்.''

''ஐயோ சாமி ஆளை விடுடா.''



அடுத்த கால் மணியில் கோயிலில் இருந்தார்கள். ஏற்கெனவே ஐயருக்குச் சொல்லியிருந்ததால், அவர் பொங்கலெல்லாம் செய்து பூஜைக்குத் தயாராய் இருந்தார். பூஜையை நல்லவிதமாய் முடித்துக் கொண்டு, பிரசாதம் விநியோகித்த பிறகு மனநிறைவுடன் காரில் ஏறிக் கொண்டார்கள்.

அதே நேரம், ரவியின் பெற்றோர் தென்றல் வீட்டில் வந்து இறங்கினர். வீடே பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. உறவினர் வருகை வேலையாட்கள் நடமாட்டம் என்று கலகலவென்றிருந்தது சூழல். பந்தல் வேய்ந்து, மாவிலைத் தோரணம் கட்டி, வீட்டை சுத்தப்படுத்தி அலங்கரித்து என்று வேலையாட்கள் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருந்தார்கள்.

பெண்கள் கோலமிடுவது, பூ கட்டுவது, பந்தி பரிமாறுவது என்று சலசலத்துக் கொண்டிருந்தார்கள். அதிக வேலையும், மேற்பார்வையிடுதலும் தென்றல் தலையில்தான் விழுந்தது.

''தென்றல், கொஞ்சம் அத்தையையும் பெரியம்மாவையும் இங்க வரச் சொல்லு. எத்தனை சீர் வைக்கணும்னு கேட்கணும்.''

''தென்றலக்கா, கனகாம்பரம் வேணுமானு பூக்கார செல்லாயி கேட்டு வரச்சொன்னா.''

''ஊரிலிருந்து வந்திருக்கற மாமா, மாமிய எல்லாம் முதல்ல போய்ச் சாப்பிடச் சொல்லு தென்றல்.''

''தென்றல், பக்கத்து வீட்டு ராசாத்திகிட்ட பத்து லிட்டர் பால் சாயந்திரம் வேணும்னு சொல்லிவிடு. நம்ம வீட்டு பால் போதாது.''

இப்படி ஓடிக்கொண்டிருந்த தென்றல் கண்ணில்தான் முதல் முதலில் வேணுவும் அவர் மனைவியும் பட்டார்கள். முதலில் ஒரு நொடி யார் என்று புரியாமல் புருவம் சுருக்கி பார்த்தாலும், மறு நொடி புரிந்து கொண்டு விட்டாள்.

''அட, நம்ம அப்பாவோட நண்பர் வேணு இல்லையா? சென்னை கல்யாணத்துல பார்த்தோமே.'

''வாங்க, வாங்க.''

வேலையாள் வந்து பெட்டி பையை வாங்கிப் போய் உள்ளே வைத்தான்.

''என்னம்மா தென்றல், நல்லா இருக்கியா?''

''ஓ, நீங்க நல்லா இருக்கீங்களா?''

''சுந்தரி, இதுதான் தென்றல், அம்மா தென்றல், இதுதான் என் மனைவி.''

இரு பெண்களும் புன்னகையை பரிமாறிக் கொண்டார்கள். இருவரையும் ஹாலில் அமர வைத்து விட்டு, சூடாய் காப்பி வழங்கினாள் தென்றல்.

''அப்பா மாடியில இருக்கார். இதோ வந்துடுவார். நீங்க அதுக்குள்ள குளிக்கறதானா – பாத்ரூம் பின்பக்கம் சூடா வெந்நீரும் இருக்கு. குளிச்சுடலாம். சாப்பிட்டு நிதானமா பேசலாம்.''

''வாப்பா வா. வாம்மா தங்கச்சி'' என்றபடி அதற்குள் நமசிவாயமே படியிறங்கி ஓடி வந்தார். நண்பர் அருகே அமர்ந்து அவர் கை பற்றி தன் கையில் வைத்துக் கொண்டவர், ''மகளிடம் சரிம்மா, நான் வேணுவை கவனிச்சுக்கறேன். நீ போய் கோயில் மண்டப சாவிய வாங்கி வந்துடு. அதுக்கு முன்னே அம்மா ஏதோ வேலை சொன்னா. போய் என்னனு கேட்டுட்டுப் போயிடு.''

''சரிப்பா'' என்று மகள் சிட்டாய் பறந்தாள்.

வேணு பக்கம் திரும்பியவர், ''இங்க நிச்சயதார்த்தம் கோயில்ல செய்யறது தான் – இந்த ஊர் – வழக்கம். அதான் ஐயரு, 'உச்சி பூஜை முடிஞ்ச உடனே மண்டப சாவிய வாங்கி வச்சுக்கங்க. ஏற்பாடு செய்ய சுலபமா இருக்கும்'னு சொன்னாரு. அதான், கோவில் மூடறதுக்குள்ள சாவிய வாங்கி வரச் சொன்னேன்.''



''ஆமாம், ஆமாம். சரி, நாங்க எங்களை கவனிச்சுக்கறோம். நீ போய் உன் வேலையை கவனி. மக கல்யாண ஏற்பாடுன்னா சும்மாவா.''

''அட, எல்லாம் நடந்துக்கிட்டே இருக்கு. ஆளு தேளுனு உதவ எத்தனை பேர் பாரு. ஒரு அஞ்சு நிமிஷம் உன்னோட இப்படி உட்கார்ந்தா, ஒண்ணும் ஆயிடாது... நீ வந்ததுல ரொம்ப சந்தோஷம்ப்பா வேணு.''

''இப்படிச் சொல்லி அன்னியமாக்காதே. எத்தனை வருஷ நட்பு! ஏதோ இடையில கொஞ்சம் போக்குவரத்து குறைஞ்சது அவ்வளவுதான். அது சரி, என் மகன்கிட்ட உன் விலாசம் கொடுத்திருந்தேன். ரவின்னு – ரவிச்சந்திரன்னு பேரு. ஒரு முறையாவது வந்தானா?''

''வந்தானாவா? நல்ல கேட்ட போ. தம்பிக்கு என் மகதான் ஆராய்ச்சியில முழுசா உதவறா, தெரியுமா? எம் மக சரித்திரத்துல எம்.பில். ஓலை கல்வெட்டால்லாம் படிப்பா...''

''அட, அப்படியா? தெரியாதே.' ஊருக்கு வந்தா உனக்கு ஒரு சர்ப்ரைஸ் காத்திருக்குப்பா'னு போன்ல ரவி சொன்னான். இது தானா அது?''

''அது மட்டுமல்ல, தம்பி தங்கியிருக்கற அவர் நண்பர் நியாகு இருக்காரே. அவர் தான் என் மூத்த மகளுக்குப் பார்த் திருக்குற மாப்பிள்ளை. இரு. நீ வந்து இருக்கற விஷயத்தை சொல்லிவிடறேன்.''

''அட, வார வழியில அந்த வீட்ல எட்டிப் பார்த்துட்டுத் தான் வரோம். வீட்டு முக்கிய நபரெல்லாம் அவங்க குல தெய்வம் கோயிலுக்குப் போயிருக்காங்களாம். ரவியும் போயிருக்கான் போல. அங்கயும் வீடு கலகலன்னுதான் இருந்தது. இந்த நிச்சய தார்த்தம் தானா அது? சரி, சரிதான். நாங்க வந்த விஷயத்தைத் தெரிவிச்சுட்டு வந்துட்டோம். ரவி வந்தவுடனே வருவான்.''

''சரி, இப்படி நீ குளிச்சு சாப்பிட்டு ரெஸ்ட் எடேன்''

தியாகு குடும்பத்தினர் வீடு திரும்பியவுடன், ரவியின் பெற்றோர் வந்திருக்கும் விஷயம் கேள்விப்பட்டார்கள். உடனே ரவி பெற்றோரைப் பார்க்கக் கிளம்பினான்.

''டேய், டேய் பார்த்துடா. அங்கேயே டேரா போட்டுடாதே. நீ மாப்பிள்ளை தோழன். உன் ஆளைப் பார்த்தவுடன் என்னை அம்போனு விட்டுடாதே.''

''சேச்சே அப்பாம்மாவைப் பார்க்கப் போறேண்டா. அப்படியே சந்துல சிந்து பாடிட்டு வந்துடறேன்.'' கண்ணடித்து விட்டு ஓடினான்.

பெற்றோரிடம் தென்றல் பற்றிப் பேசிவிட துடித்துக் கொண்டிருந்தது அவன் மனம்.

சாப்பிட்டு விட்டு வெற்றிலை பாக்குத் தட்டோடு உட்கார்ந் தார்கள் வேணும் சுந்தரியும்.

அப்போதுான். ''நீ சொன்ன வேலையெல்லாம் முடிச் சுட்டேன் அம்மா. கோயில் போய் சாவி வாங்கி வந்துடறேன்'' என்று அவர்களைக் கடந்து ஓடினாள் தென்றல்.

அவளையே கவனித்த சுந்தரி, ''ஏங்க சென்னை கல்யாணத்துல பார்த்துட்டு நீங்க சொன்ன போது கூட நான் அதை சீரியஸா எடுத்துக்கலை. ஆனா, நேர்ல தென்றலைப் பார்த்தவுடன் அசந் துட்டேங்க. நம் பையனுக்கு எத்த ஜோடி. நல்ல படிப்பு, அழகு, பண்பு...''

''எல்லாம் சரிம. நம்ம பையன் என்ன சொல்றான்னு தெரியலையே.''

''நம்ம பையன் என்ன சொல்லுவான்? ஆராய்ச்சி, ஐ.ஏ.எஸ்னு ஏதாவது புலம்புவான். அவனை நான் சரிகட்டறேன். நீங்க உங்க நண்பர்கிட்ட பேசுங்க. பொண்ணை வேற யாராவது கொத்திக்



கிட்டுப் போயிடப் போறாங்க. என் மகன் மனசுல இதுவரை யாரும் கிடையாது. எனக்குத் தெரியும். நான் அவனை சரி கட்டறேன்.''

இவர்கள் பேசப் பேச, நமசிவாயம் அருகே வந்து உட் கார்ந்தார்.

''என்ன வேணு, நல்லா சாப்பிட்டியா? தங்கச்சி நல்லா சாப்பிட்டியாம்மா?''

''ஆச்சு அண்ணே. இவர்தான் உங்ககிட்ட ஏதோ முக்கியமா பேசணும்னாரு.'' சுந்தரி எடுத்துக் கொடுத்தாள்.

''அட, நிச்சயதார்த்தம் நல்லபடி முடியட்டுமே சுந்தரி. அவனே அவசர ஜோலியா அல்லாடிட்டிருக்கான்.''

''இருக்கட்டும். என்ன விஷயம்மா தங்கச்சி?''

''சீக்கிரம்னு சொல்வாங்க. ஒரு வரியில் நல்ல விஷயத்தை சொல்றதுல என்னவாம்?''

''பரவாயில்லை. நீ நேரமெடுத்தே சொல்லலாம்மா.''

இந்த நேரத்தில் தான் ரவி, அப்பாம்மாவைப் பார்க்க படியேறி வந்து நின்றான். கண்ணால் துளாவியவன் கண்ணில் பெற்றோர் நமசிவாயத்துடன் பேசுவது புரிய, அவசரமாக நெருங்கினான்.

வேணுவின் குரல் அவன் செவியை எட்டியது.

''நாம ஏற்கெனவே பேசிய விஷயம் தாம்ப்பா சிவா. உன் ரெண்டாவது மகளை என் மகனுக்குப் பேசினா என்ன?''

''நான்தான் அன்னிக்கே சம்மதம் சொல்லிட்டேனே! அவங்க ரெண்டு பேரும் ஜோடியாக் கிளம்பி கோயிலுக்கு போற, அழகே தனி! உன் மகன்னு தெரிஞ்சுதானே என் மகளை உதவவே அனுமதிச்சேன்.''

"நீ உன் மககிட்ட பேசு. நான் என் மகன்கிட்ட பேசறேன். ரெண்டு நாள் டயம் கொடு. என் நெருங்கின சொந்தக்காரங் களை இங்கவே வரவழைக்கிறேன். இதே மாதிரி நிச்சயம் பண்ணிடுவோம். கல்யாணம் வேணும்னா நிதானமா – என் மகன் ஐஏஎஸ் முழுசா பாஸ் பண்ணின பிறகு வெச்சுக்கலாம். என்ன சொல்றே?"

ஒவ்வொரு வார்த்தையும் தேனாய் ரவியின் செவியில் பாய்ந்து கொண்டிருந்தன.

நமசிவாயம் மிகவும் உற்சாகமானார். "நீ இவ்வளவு வேகமா இருக்கியா, சரி. நான் போய் இப்பவே கோயில்ல, என் மககிட்ட பேசறேன்." இளைஞனைப் போல் உற்சாகமாய் எழுந்து போனார் நமசிவாயம்.

தென்றலின் சம்மதத்தை தானே நேரில் கேட்க ரவிக்கு ஆசை. அதனால் வந்த கவடு தெரியாமல் பின்வாங்கினான். நமசிவாயம் அறியாமல் அவரைப் பின் தொடர்ந்தான்.

அப்பாவிடம் தென்றல் சம்மதத்தை எப்படி தெரிவிப்பாள்? வழி பூரா கற்பனை செய்தபடி நடந்தான்.

கண்கள் நிலம் நோக்க, நாணம் முகத்தை செம்மையாக்க "நீங்க சொன்னா சரிப்பா" என்பாளா?

அல்லது பாரதியின் புதுமைப் பெண்ணாக, "யெஸ், அவர் எல்லாவிதத்திலும் எனக்கு பொருத்தமா இருப்பார்ப்பா. இருந்தாலும் அவர்கிட்ட ஒரு வார்த்தை பேசிடறேனே. பிறகு நீங்க உங்க நண்பர்கிட்ட சம்மதம் சொல்லுங்க" என்பாளா?

அவர்கள் கோவிலை நெருங்கும் போது, கோயிலில் சுத்தமாக ஜனநடமாட்டம் இல்லை. குருக்கள் மட்டும் கிளம்ப ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். பிரகாரம் சுற்றிக் கொண்டிருந்த தென்றல், அப்பாவைப் பார்த்தவுடன் "என்னப்பா?" என்றபடி ஓடி வந்தாள்.



ரவி, சட்டென்று ஒரு தூணின் பின்னே ஒளிந்து கொண்டான். தன் செயல் தவறோ? என்று தோன்றினாலும், நாளை மனைவி யாகப் போகிறவள் தானே! அவள் சம்மதம் சொன்னவுடன், "தேங்க்ஸ்" என்றபடி அவளெதிரே போய் நின்று அசத்தப் போகிறேன். இதில் என்ன தவறு என்ற சமாதானமும் ஏற்பட்டது. போரிலும் காதலிலும் எல்லாம் சரியே!

நமசிவாயம் வாயெல்லாம் பல்லாக, "நல்ல சேதிதாம்மா. உனக்கும் கல்யாண யோகம் கூடி வந்திருக்கு" என்று சற்றே இடைவெளி விட்டு மகளைக் கூர்ந்து பார்த்தார்.

'இதென்ன கூத்து?' என்பது போல் மகள் நோக்க, அதற்கு மேல் பொறுமையை சோதிக்க விரும்பாமல், "நம்ம ரவியோட அப்பா வந்திருக்காரில்ல. உன்னை தன் மகனுக்கு கட்டிக்க ஆசைப்படறார்."

ரவி ஆர்வமாய் அவள் முகம் நோக்கினான்.

தென்றலின் முகம் சிறுத்தது. மனம் வலிக்க, முகம் சிறுத்தது. ரவி தியாகுவிடம் ஆரம்பத்தில் தன்னை மறுத்துப் பேசிய வார்த்தைகள் செவியில் ரீங்கரிக்க, மனம் வலித்தது.

அதன்பின், இத்தனை நாள் பழக்கத்திலும் ரவி தன்னை விரும்புவதாய் எந்த சூழலிலும் வெளிப்படுத்தவில்லை. தன்னை மறந்து தஞ்சைப் பெரிய கோயிலில், அவன் ராஜராஜன் என்றால், தான் வானதியா என்ற போது கூட சிரித்தான் – கிண்டலாய்ச் சிரித்தான். அவ்வளவு தான். எத்தனை வேதனை ஏற்படுத்திய சிரிப்பு அது! ஆமோதிப்பாய் ஒரு வார்த்தை சொல்லவில்லையே.

பெற்றோர் தன்னை அவனுடன் இணைத்து மணம் பேசுவது இந்தப் பாழும் மனதுக்கு எத்தனை சந்தோஷத்தைத் தருகிறது! ஆனால், தன்னை விரும்பாதவனுக்கு வாழ்க்கைப்பட்டு, அவன் வாழ்வில் முள்ளாய் உறுத்த வேண்டுமா? அவனாவது சந்தோஷமாய் வாழட்டுமே. உறுதியான எண்ணம் முகத்தில் கடுமை ஏற்ற.

"இந்தக் கல்யாணம் வேண்டாம்பா, பிளீஸ்" என்று ஒற்றை வரியில் கூறிவிட்டு, அழுகை முட்டிவர, அங்கிருந்து ஓடினாள்.

நமசிவாயம் திகைத்து நின்றார்.

ரவி பொடிப் பொடியானான்.

## 9

வேர் வெந்நீரைத் தாங்குமா?
சேய் தாயைப் பிரியுமா?
நமக்குள் மட்டும்
ஏன் இந்தச்
கடும் பிரிவு?

நாய் ஒன்று சிறுவனிடம் கல்லடி பட்டு ஊளையிட்டபடி ஓடியது. யூனிபாமும் செரும்பும் அணிந்து துணிப்பையில் புத்தகங்கள் சுமந்து சிறுவர்கள் பள்ளி சென்று கொண்டிருந்தார்கள். கையில் கொடுக்காய் புளி, கமர்கட்... இரண்டொருவர் ஆற்றில் குளித்து விட்டு ஈர வேட்டி கால் தடுக்க 'சரக் சரக்' என்று கடந்தார்கள்.

"ஏலே, பூச்சி மருந்து போடச் சொன்னேனே, போட்டியா?"

"மறக்கலீங்க."

பெரிதாய் பேசியபடி கடந்தார்கள் இருவர்.

மாடி வராண்டா கைபிடிச் சுவர் பற்றிய படி நின்று பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் மனதில் இவை எதுவும் பதியவில்லை.

அடையாளத்துக்காக வண்ணம் தோய்க்கப்பட்ட கோழிக் குஞ்சுகள் கீழே சுதந்திரமாய் தன் அம்மா பின் சுற்றிக் கொண்டிருந்தன. வெள்ளையும் மஞ்சளும் சிவப்புமாக பச்சை செடிகளில் வண்ண மாயமாய்ப் பூக்கள் பூத்துக் குலுங்கின.



வந்த புதிதில் அவன் மனம் கவர்ந்த சூழல்தான். அதே இயற்கை எழில், வெள்ளை மன மனிதர்கள் தான். இன்று எதுவுமே அவன் மனதில் அமைதியைத் தரவில்லை.

மாறாய் வெறுமையைத் தான் தந்தன. சூன்யமாய்த் தோன்றின.

தன் மனதையும், கண்ணையும், ரசனையையும் தென்றல் பறித்துக் கொண்டு விட்டதாய் தோன்றியது.

என்னைப் பார்த்தவுடன் மலரும் அந்த முகமா திருமண சேதி கேட்டவுடன் கருத்தது,

'நீ ராஜராஜன் என்றால் நான் வானதியா?' என்று தன்னை என்னோடு இணைத்துப் பேசிய வாயா என்னை மறுத்தது?

ஏன்? ஏன்? என்னை ஏன் மறுத்தாய் பெண்ணே? என் தகுதியில் குறையா?

என் அன்பில் களங்கமா?

என் விருப்பப்படி படித்தேன். வேலை தேடிக் கொண்டேன். ஆராய்ச்சியில் ஈடுபட்டேன். வாழ்க்கைத் துணை மட்டும் ஏன் என் விருப்பத்தின் படி அமையாமல், என்னை நிராகரிக்கிறது?

முதல் பார்வையில் உன்மேல் ஏற்பட்ட வெறுப்பு நிலைத்திருக்கக் கூடாதா? நான் இப்படி அவதிப்படாமல் இருப்பேனே. அதைவிட, உன்னைச் சந்திக்காமல் இருந்திருக்கக் கூடாதா? பெண்ணே, ஏன் என்னை வதைக்கிறாய்.

உனக்கும் எனக்கும் மணம் இல்லையா?

உன் மனம் எனக்கில்லையா?

அப்படியென்றால் நான் உன்னை மறக்க வேண்டுமா? முடியுமா? அந்த இனிய குரல் இனி எனக்காக ஒலிக்காதா?

எண்ணத்தின் வேகம் கண்களில் நீரை வரவழைத்தது.

தோளில் இதமாய் கை விழ, அவசரமாய்க் கண்ணைக் கசக்கி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, போலியாய் சிரித்தபடி திரும்பினான்.

மலர்ச்சியாய் தியாகு நின்று கொண்டிருந்தான்.

''என்னடா, உங்கப்பா கிழே வந்திருக்கார். நீயும் அவங்களோடவே கிளம்பறியாமே. ஏன்?''

முகம் திருப்பி நின்ற ரவி, ''வேலை முடிஞ்சுடுச்சு. கிளம்பிடலாம்னு நினைச்சேன்.''

அவன் முகம் தொட்டுத் திருப்பிய தியாகு, ''என்டா டல்லா இருக்கே? உன் கல்யாணம் உடனே நடக்கலையேனு வருத்தமா?''

ஒரு நிமிடம் மௌனமாய் நின்றான் ரவி.

சிரித்துக் கொண்ட தியாகு, ''நல்ல காதல் போ! தென்றல் என்ன உன்னைக் கல்யாணம் செய்ய மாட்டேன்னா சொல்லிட்டா. மேல படிக்க, இல்ல, வேலைக்குப் போன பிறகு கல்யாணம் பத்திப் பேசலாமேனு தானே சொல்லி இருக்கா. நல்லதுதானே. அதுக்குள்ள நீயும் செட்டிலாயிடலாமே.''

ரவிக்கு மறுப்பாய் கத்த வேண்டும் போல் இருந்தது.

இல்ல. இது தென்றலோட அப்பா சொன்ன சால்ஜாப்பு. என் அப்பாவிட்ட – தன் நண்பர்கிட்ட – நேரடியா மறுப்பை சொல்ல முடியாம, 'பொண்ணு மேல படிக்க ஆசைப்படறா, வேலைக்குப் போக ஆசைப்படறா'னு சொல்லிட்டார். கோயில்ல மறைஞ்சு நின்னு கேட்டு இருக்காட்டி, நானுமே உன்னைப் போல நம்பியிருப்பேன், என்று நண்பனிடம் உண்மையைக் கொட்டிவிட ரவியின் மனம் துடித்தது. நண்பனின் முகத்தை நிமிர்ந்து பார்த்த



வனால் அப்படியே உடைத்துப் பேச முடியவில்லை. முதல் நாள் தான் நிச்சயதார்த்தம் முடிந்திருந்த மலர்ச்சி முகத்தில், சிரிப்பில், விகசிப்பில்... இவனிடம் போய் இந்த சமயம் தான் காதல் தோல்வியைச் சொல்லி அழுவதா.

''நீ சொல்றதும் சரிதான் தியாகு. கிட்டதட்ட ஒரு மாசமா பழகின உங்களையெல்லாம் பிரிய மனுசு கஷ்டமா இருக்கு அதான்...''

''யேய், யேய்... யார்டா இவன்! எங்களைப் பிரிய மூக்கால அழுறானாம். உண்மையைச் சொல்லுடா. உன் தென்றலைப் பிரிய கஷ்டப்படறே. அதானே உண்மை.''

ரவியால் பேச முடியவில்லை. முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டு, ''சேச்சே'' என்றான்.

''இதப்பாரு, என் கல்யாணத்துக்குள்ள, உன் ஐ.ஏ.எஸ் இன்டர்வியு ரிசல்ட் வந்துடும். அவ மேல ஏதாவது செய்யப் போறதும் தெளிவாயிடும். அப்ப உங்க நிச்சயதார்த்தத்தை வச்சுக்கலாம். நான் கேரண்டி, சரியா?''

போகாத ஊருக்கு வழி போடறாடா என்று மனதுள் நினைத்தவன், வெளியே ''தேங்ஸ்டா, உன் கல்யாணத்துல மீட் பண்ணலாம்'' என்று புன்னகைத்தான்.

## 10

**வெண்ண மயில்**
**தோகை விரிக்கும் போதும்,**
**கருமை மேகம்**

நல்ல மழை பொழியும் போதும்,
சின்ன ஜீவன்
கைகொட்டிச் சிரிக்கும்போதும்,
உன்னைத் தானே
என் மனம் நினைத்துத் தவிக்கும்!
உன் மனமோ
கல்லாய் சமைந்து கிடக்கும்.

சூரியன் மெல்ல எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு மேலெழ ஆரம்பித்து விட்டான். பறவைகள் இரை தேடப் புறப்பட்டு விட்டன. வான மகள் இளம் சிவப்புப் புடவையைக் களைந்து மெல்லிய வெளிர் நீலத்தில் புடவை அணியத் துவங்கி இருந்தாள்.

அறைக்குள் எட்டிப் பார்த்த சூரியக் கிரகணம், இன்னும் எழாமல் தூங்கும் தென்றலை ஆச்சர்யமாய்ப் பார்த்து தன் மெல்லிய ஒளியால் அவளை எழுப்ப முயன்று கொண்டிருந்தது. தென்றலின் அறைத் தோழி ஹாசினியும் தலை துவட்டியபடி உள்ளே நுழைந்தவள் தென்றல் அசந்து தூங்குவதைப் பார்த்து அதிசயித்தாள். துண்டை ஸ்டாண்டில் போட்டு விட்டு, தென்றல் அருகே வந்து அமர்ந்து மெல்ல அவளைத் தட்டி, ''தென்றல், தென்றல்'' என்று எழுப்பினாள்.

புரண்டு படுத்த தென்றல், கண்களைப் பிரித்தாள்.

''என்னம்மா? மணி ஏழாகப் போகுது. இன்னும் எழலையா? புது மேலதிகாரி வந்து பொறுப்பெடுக்கப் போறாருனு சொன்னியே. சீக்கிரமா ஆபீஸ் போகணும்னு சொல்லிட்டு. இப்படி தூங்கினா... உடம்பு கிடம்பு சரியில்லையா?''

ஹாசினி தாயின் பரிவுடன் கேட்க, புன்முறுவலுடன் எழுந்து தலையை உதறி முடிந்து, புடவையை சரி செய்து கொண்டாள் தென்றல்.



''உடம்புக்கெல்லாம் ஒரு கேடும் இல்ல, ஹாசி. நேத்து ஆபீஸ் நிறைய வேலை. கொஞ்சம் டயர்டா போயிடுச்சு அதான். இரு போய் பல் தேய்ச்சு குளிச்சிட்டு வந்துடறேன்.

அவசரமாய் ஒரு குளியலைப் போட்டு, உடை மாற்றி, தலை பின்னி இருவருமாய் டைனிங் ஹாலில் டிபனை முடித்துக் கொண்டார்கள். தென்றல் ஸ்கூட்டியைக் கிளப்பி, வழியில் ஹாசினியை இறக்கிவிட்டு, தன் அலுவலகம் நோக்கிப் பறந்தாள்.

எக்மோர், டிபார்ட்மெண்ட் ஆஃப் ஆர்கைவ்ஸ்ஸில் நுழைந்து வண்டியை நிறுத்திவிட்டு, கைப்பை சகிதம் உள்ளே பரபரப்பாய் நுழைந்து வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டாள். இடத்தில் அமர்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டு நிமிர்ந்த பொழுது, எதிரே சிரித்தபடி பாலகுமார் நின்று கொண்டிருந்தான்.

''குட்மார்னிங்''

''குட்மார்னிங். புது டைரக்டர் வந்துட்டாரா?''

''அதான் இவ்வளவு டென்ஷனா? இன்னும் இல்லை,'' என்றவன் ஒரு இனிப்புப் பெட்டியை அப்படியே பிரிக்காமல் அவள் முன் நீட்டினான்.

'என்ன விசேஷம்?' என்பது போல் பார்த்தவள், பிரிக்காமல் நீட்டுகிறானே, அப்படியேவா பெற்றுக் கொள்வது என்பது போல் தயங்கினாள்.

''பிடி''

''என்ன விசேஷம்?''

''நினைவில்லையா? நீ ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி வேலையில சேர்ந்த தினம்.''

''மைகாட். அதுக்காக...''

''அதுக்காக, சின்ன ஸ்வீட் டப்பா பரிசு. வாங்கிக்க.''

அவள் ''தேங்க்ஸ்'' என்று பெற்றுக் கொண்டாள்.

"வேற எதாவது வாங்கிக் கொடுத்தா, நீ வாங்கிக்க மாட்டே. அதான் ஸ்வீட் வாங்கினேன்."

"தேங்க்ஸ்"

"அவ்வளவுதானா?"

"புரியலை"

"மதியம் என்னோட லஞ்ச் சாப்பிடற பாக்யத்தைக் கொடுக்கக் கூடாதா?"

ஒரு நிமிடம் யோசித்தவள், கலகலவென்று சிரித்தாள். பின், "சரி" என்றாள்.

"ஓ, தேங்க்ஸ் எ லாட்"

"சரி இப்ப இடத்திற்கு போங்க. எல்லாரும் பார்க்கறாங்க..." அவனை அனுப்பிவிட்டு, அன்றைய வேலை என்ன என்று பார்க்க டைரியைப் புரட்டியபோது, தேதியைப் பார்த்தாள். குமார் சொன்னது உண்மை. அன்றோடு அவள் வேலைக்குச் சேர்ந்து இரண்டு வருடங்கள் ஓடிவிட்டிருந்தன.

அழகிய மழுவூரை விட்டு சென்னை வாசம் மேற்கொண்டு இரண்டு வருடங்கள் ஓடிவிட்டனவா? அவளுக்கு ஆச்சர்யம்! அந்த ஆறு, தோட்டம், பறவைகள், சுகந்த காற்று, குடும்பம் பசுமை எல்லாம் பிரிந்து இரண்டு வருடங்கள்! ஊர் என்பது இப்போதெல்லாம் பொங்கல், தீபாவளிக்குப் போகும் ஒரு தற்காலிக இடமாகப் போய் விட்டது. இடையில் அக்கா இள வேனிலுக்கு வளைகாப்பு சீமந்தம் என்றும், குழந்தை பிறந்த வுடன் ஒருமுறையும், குழந்தைக்கு ஆண்டு நிறைவு என்றும் போய் வந்தாள். அத்தோடு சரி.

இவள் வருகைக்காக அந்த ஊரும் ஆறும் குடும்பமும் ஆவலாய்க் காத்திருக்கும். விட்டுக் கிளம்பும் போது வேதனை தான்.



குடும்பத்தினரை சமாதானம் செய்துவிட்டு நேற்று தான் வேலையில் சேர்ந்தது போல் இருக்கிறது! அதற்குள் நாட்கள் தான் எத்தனை வேகமாக ஓடுகின்றன! வேலைக்கான ஆர்டர் வந்த அன்று பாட்டி எப்படித் தடுத்தார்!

"வேனில் கல்யாணத்தை முடிச்ச கையோட உன் கல்யாணத்தை முடிச்சுடணும்னு நாங்க நினைச்சுக் கிட்டிருக்கோம். நீ என்னடான்னா வேலைக்கு போவேன்னு நிக்கற. பட்டணத்துல போய் த்னியா இருந்து வயசுப் பொண்ணு வேலைக்குப் போற தெல்லாம் சரிப்படாது. அந்தப் பிள்ளை ரவிக்கு என்ன குறைனு இப்ப கல்யாணம் வேண்டானு சொல்றே?"

குறை அவர் என்னை விரும்பாதது தான் என்று நினைத்துக் கொண்டாள். நினைத்ததைச் சொல்லாமல் பாட்டி அருகே போய் அமர்ந்து கொண்டாள்.

"நிறையப் படிச்சு, அதுக்கு ஏத்த வேலைக்குப் போகணும்னு நினைக்கறது தப்பா பாட்டி? அப்பா இவ்வளவு சொத்து இருந்தும் தமிழ் வாத்தியாரா வேலை பார்க்கலையா? நான் என்ன கல்யாணமே வேண்டாம்னா சொல்றேன்? ரெண்டு வருஷம் வேலைககுப் போயிட்டு கல்யாணம் செஞ்சுக்கறேன் ப்ளீஸ்."

இப்படி அப்படி பேசி சம்மதிக்க வைத்து... இதோ வேலையில் சேர்ந்து இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. ஊர் போகும் போதெல்லாம் பாட்டி திருமணம் பற்றிப் பேசுவதும், இவள் தள்ளிப் போடுவதுமாய் எத்தனை நாட்கள் இந்தக் கண்ணாமூச்சு? ரவி வேறு ஒரு பெண்ணை மணக்கும் வரையா? மணந் திருப்பானா? என்னை மறந்திருப்பானா? நினைத்தால் தானே மறக்க! நினைத்து விட்டு நானல்லவா மறக்க முடியாமல் அவதிப் படுகிறேன். இடம் மாறி வந்தால், அவனைக் காலப்போக்கில் மறந்து விடலாம் என்று போட்ட கணக்கும் தப்பாகிவிட்டதே.

மறந்திருந்தால், என் ஒரு கடைக்கண் பார்வைக்கு ஏங்கும் இந்த குமாருக்கு சம்மதம் சொல்லி இருக்கலாமே.

போன முறை ஊருக்குப் போன போது பாட்டி, ''தென்றல், ரவியப் பிடிக்கலைனா சொல்லிடு, வேற இடமாவது பார்த்துடலாம்'' என்ற போது கூட 'சரி' என்று சொல்ல முடியவில்லையே.

கனவு நினைவு என்று மனம் முழுதும் அமர்ந்து சதா இச்சிக்கும் ரவி இப்போது எங்கே இருக்கிறான்?

தியாகு திருமணத்திற்குக் கூட வரமுடியாமல், 'பயிற்சிக்காக மசூரி போகிறேன். வரமுடியவில்லை. வாழ்த்துக்கள்' என்று தந்திதான் அடித்திருந்தான். அவன் பெற்றோர் தான் வந்து போனார்கள்.

பின், அவன் ஆராய்ச்சிக்குக் கட்டுரை ஏற்றுக் கொள்ளப் பட்டு டாக்டர் பட்டம் கிடைத்த போது, தென்றலுக்கு, இரண்டே வரியில் அழகாய் நன்றி தெரிவித்து, டாக்டர் பட்டம் கிடைத்த செய்தி அறிவித்து கடிதம் போட்டிருந்தான். துளிக் கூட பர்சனல் டச் இல்லாத கடிதம்! சப் கலெக்டராய் பதவி ஏற்றவுடன் தியாகுவிற்கு ஒரு கடிதம் போட்டிருந்தான். அவ்வளவுதான்.

அதன்பின் ஒரு சேதியும் தெரியவில்லை. தியாகுவும் வேனில் கருவுற்றது முதல் குழந்தை பிறந்தது வரை அவள் கூடவே இருந்து கவனித்துக் கொண்டதில், அதிகம் சென்னை வரவோ, ரவி வீட்டினரை தொடர்பு கொள்ளவோ முடியவில்லை.

ரவியின் நினைவே சுகந்த பூவாய், அவன் மறுப்பே முள்ளாய் அவளை சுகமாய் இம்சித்த அவதியை அவள் எப்படி வீட்டினரிடம் தெரிவிப்பாள். அவன் நினைவே போதும். திருமணம் என்ற ஒன்று தன் வாழ்வில் வேண்டாம். அதை வெளிப்படுத்த தகுந்த சந்தர்ப்பம் தான் வரவேண்டும். அதுவரை காத்திருப்போம்.

''மேடம்''

அவள் நினைவிலிருந்து கலைந்தாள். ப்யூன் ரங்கசாமி நின்று கொண்டிருந்தான்.

''என்னப்பா?''



''உங்களைப் பார்க்க உங்க மாமாவாம்... தியாகுனு ஒருத்தர் - வந்திருக்காரு.''

அவள் அவசரமாய் எழுந்து ரிசப்ஷன் நோக்கிப் போனாள். கையில் பூவும் பழமும் ஸ்வீட்டும் உதட்டில் புன்னகையுமாய் தியாகு நின்று கொண்டிருந்தான்.

''அட, வாங்க மாமா.''

''என்னம்மா எப்படி இருக்கே? அரிசி பர்மிட் வாங்க வந்தேன். உன்னை அப்படியே பார்த்துட்டுப் போகலாம்னு வந்துட்டேன்.''

''உட்காருங்க மாமா. ஊருல எல்லோரும் நலமா?''

''எல்லோரும் சுகம். உன் கல்யாண கவலைதான் எல்லோரையும் மனக்கஷ்டத்துக்கு ஆளாக்குது.'' நேராக அவன் விஷயத்துக்கு வந்தான்.

அவள் தலைகுனிந்து கொண்டாள்.

அவனே தொடர்ந்தான்.

''இங்க பாரு, வேலைக்குப் போகணும்னு ஆசைப்பட்டே. ரெண்டு வருஷமா போய் வரே. உன் விருப்பத்துக்கு நாங்க சம்மதிச்ச மாதிரி எங்க விருப்பத்துக்கும் நீ கொஞ்சம் மதிப்புக் கொடுக்கணும் இல்லையா?''

''நான் மறுக்கலையே மாமா.''

''அப்ப ஏன் சம்மதிக்கத் தயங்கறே? உங்கப்பாவும் சரியா பிடி கொடுக்க மாட்டேங்கறார்... நான் இப்ப நேர ரவி வீட்டுக்குப் போகப் போறனே். ரவிக்கு இந்த ஊருக்கே மாத்திட்டதா கேள்விப்பட்டேன். போய் சம்பந்தம் பேசிடவா? இதைக் கேட்கத்தான் அலுவலகத்துக்கு வந்துட்டேன்.''

''ரவிக்கு இன்னும் கல்யாணம் ஆகலையா?''

இந்தக் கேள்வியால் அதிர்ந்து போய்ப் பார்த்தான் தியாகு.

''என்ன கேக்கறே நீ? உன்னோட நிச்சயம் பண்ணலாம்னு ரெண்டு வீட்டுப் பெரியவங்களும் பேசின பிறகு, வேற ஒருத்திய - நாம மறுக்காத பட்சத்துல - ரவி ஏன் கல்யாணம் செஞ்சுக்கணும்?''

இப்போதுதான் தென்றலுக்குப் புரிந்தது. மகள் மறுத்து விட்டாள் என்று சொல்லத் தயங்கி, தன் அப்பா சொன்ன சாக்கு சின்ன பொய் - ரவியின் திருமணத்திற்குத் தடையாய் இருக்கிறது. தன்னால், தன் ரவி ஏன் சந்தோஷ வாழ்வை இழக்க வேண்டும்? ஒரு முடிவுக்கு வந்தவளாய், கையில் மணி பார்த்தாள். எந்த நேரமும் மேலதிகாரி வந்துவிடலாம். தியாகுவிடம் மறைத்துப் பேசுவதும் சரியல்ல. தன்னை மறுத்து தியாகுவிடம் தானே ரவி பேசினான். பின் ஏன் தியாகு இந்தத் திருமணத்தில் இத்தனை தீவிரம் காட்ட வேண்டும்?

''மாமா, தயவு செஞ்சு பெரியதனமாப் பேசறேன்று நினைக்காதீங்க. திருமணம் தவிர மனுஷன் உலகில் சாதிக்க எத்தனையோ விஷயம் இருக்கு. எனக்கு திருமணத்தின் மீது நாட்டம் இல்லை. அப்படி நாட்டம் ஏற்படும்போது பார்த்துக் கொள்ளலாம். உங்க நண்பர் ரவி வீட்ல எனக்காக காத்திருந்து அவர் வாழ்வை பாழடிக்க வேண்டாம். போய் சொல்லிடுங்க... எனக்கு மேலதிகாரி வர்ற நேரமாச்சு.''

தியாகுவின் முகம் இருண்டது. தென்றலிடமிருந்து இத்தகைய வார்த்தைகளை அவன் எதிர்பார்க்கவில்லை. ஒரு நிமிடம் அதிர்ச்சியில் அப்படியே ஆணி அடித்தது போல் அமர்ந்து விட்டான். பின், மெல்ல சுதாரித்துக் கொண்டான்.

''தென்றல், நீயா இப்படி பேசறே?''

''தப்பா ஒண்ணும் சொல்லிடலையே, மாமா,''

''ரவிக்கு உன் மேல...''

''உன்ன அபிப்ராயம் தெரிஞ்சுதான் சொல்றேன். விருப்ப மில்லாம ரெண்டு பேர் கட்டாயத்தின் பேர்ல சேர்ந்து வாழ்ந்தா அந்த வாழ்க்கை சுவைக்காது.''



தென்றலுக்கு விருப்பமில்லை. இனி கட்டாயப்படுத்தி என்ன பயன்?

அதற்குமேல் பேச ஒன்றும் இல்லை என்பது போல் தியாகு எழுந்தான். இரண்டடி எடுத்து வைத்தவன் திரும்பினான்.

''ஒண்ணு ஒண்ணு கேட்காம போனா என் மனசு ஆறாது. பெரிய கோயிலை கட்டின ராஜராஜன் நீன்னா, நான் வானதியானு கேட்டியாமே அதுக்கு என்ன அர்த்தம்? ஏன் அப்படி சொன்னே?''

ஒரு நிமிடம் தடுமாறினாள் தென்றல். பின் சாமார்த்தியமாய் சமாளித்தாள்.

''உங்ககிட்ட அதைக் கூடச் சொல்லி சிரிச்சிருக்காரா ரவி, ஏன், மாமா? அது, நான் கேஷுவலாச் சொன்னது. நீ ராஜான்னா, நான் பெரிய ராணினு சொல்றதில்லையா அது மாதிரி அவர் ஆண். தன்னை சோழ சாம்ராஜ்ய பேரரசன்னு சொல்லிக்கிட்டார். நான் என்னை அரசின்னு சொல்லிக்கிட்டேன். அதை நீங்க தப்பா எடுத்துக்கிட்டீங்களா?'' இதற்கு மேல் என்ன பேச என்பது போல் பார்த்த தியாகு, மெல்ல எழுந்து வெளியேறினான். புது இயக்குனராய் பொறுப்பேற்க அலுவலகத்திற்குள் நுழைந்த ரவிச்சந்திரனை அவன் சரியாய் கவனிக்காமல் கடந்தான். ரவி அவர்கள் பேசியதைக் கேட்டுவிட்டான் என்பதை உணராத தென்றலும், கனத்த இதயத்துடன் தன் இருக்கையில் வந்து அமர்ந்தாள்.

## 11

கம்பளி போர்த்தி
உச்சிப் பொழுதில்
பாலையில் படுத்திடலாம்...
நள்ளிரவினிலே பனிமலையில்
வெற்றுடம்பாய் நடந்திடலாம்...

கடலடியில் மூச்சடக்கிக்
காலமெல்லாம் கிடந்திடலாம்...
எரியும் தீயில் நீந்திடலாம்...
எதையும் தாங்கும் இதயம்
காதல் வேதனை மட்டும் தாங்காதே.
என்னை வதைப்பது
என்னவனே!

அன்று மதியம் லஞ்ச் சாப்பிடும் பொழுது, பாலகுமார் மிக உற்சாகமாய் இருந்தான். இரண்டு இனிப்பு சூப்போடு மூன்று நட்சத்திர ஹோட்டலில் தடபுடல் செய்து மதிய உணவுக்கான ஆர்டரைக் கொடுத்தான்.

தென்றல் தான் எதையும் ரசிக்கும் மனநிலையில் இல்லை. நியாகுவிடம் ரவியை மறுத்துப் பேசியதும், ரவியையே புது இயக்குனராய்ப் பார்த்ததும் அவளை ஒரு புரட்டு புரட்டி விட்டது. இதைப் புரிந்து கொள்ளாத பாலகுமார், தன் போக்கில் பேசிக் கொண்டு போனான்.

''ரெண்டு வருஷத்துல நீ இன்னைக்குத்தான் என்னை மதிச்சு லஞ்சுக்கு வந்திருக்கே. யு நோ. ஹெள ப்ளீஸ்ட்.அண்ட் ஹேப்பி ஐ எம்!''

சம்பிரதாயமாய் புன்னகைத்தாள் தென்றல்.

''சரி, வேற என்ன ஆர்டர் தரட்டும்?''

''நீங்க சொன்னதெல்லாம் அதிகம் குமார். என்னால இதையே சாப்பிட முடியாது.''

''சரி, போர்ஸ் பண்ணலை. எது பிடிக்குமோ சாப்பிடு. ஆமாம். இந்தப் புது டைரக்டருக்கு உன்னைத் தெரியுமா? நான் கவனிச்சேன். பார்த்தாரு. உன் முறை வந்தபோது, உன்னையே வெறிச்சுப் பார்த்தாரு. உன் முறை வந்தபோது, அவரே உன் பேரைச் சொல்லி ''ஹாய்னாரு.''



கேட்கும்போதே குமாரின் குரலில் சின்ன பொறாமை எட்டிப் பார்த்தது.

''தெரியும்,''

''எப்படி, எப்படி?''

''என் அக்கா வீட்டுக்காரரோட நண்பர்.''

''அவ்வளவுதானா?'' அவன் முகத்தில் நிம்மதி தெரிந்தது. தென்றல் அதை ஏனோ ரசிக்கவில்லை.

கர்சீப்பால் வாயை ஒற்றியவள், ''போலாமா?'' என்று எழுந்தாள். அவன் பில் பணத்தை வைத்துவிட்டு, அவரசமாய் அவளைத் தொடர்ந்தான்.

அலுவலகம் திரும்பி மும்முரமாய் வேலையில் ஈடுபட்டிருந்த தென்றலை, ப்யூனின் குரல் கலைத்தது.

''புது டைரக்டர் ஐயா உங்களைக் கூப்பிட்டாரு.''

தென்றலுக்கு குப்பென்று வியர்த்தது. மெல்ல தயங்கி நடக்க முயன்றாலும் ஏனோ கால்கள் வலுவிழந்து தொய்ந்தன.

நாசூக்காய் அவன் அறைக் கதவைத் தட்டிவிட்டு அவன் அனுமதிக்குரல் வந்த பின் உள்ளே நுழைந்தாள்.

''வா, தென்றல், உட்காரு'' என்றான் அவன் இயல்பாய்...

''குட்மார்னிங், சார்'' அவள் எதிர் நாற்காலியில் அமர்ந்தாள்.

'அட' என்று பார்த்தவன், ''வெரி குட்மார்னிங் மே'ம்'' என்றான் குறும்பாய்.

அவனுள் மீண்டும் பட்டாம்பூச்சிகள் படபடத்தன. அதே குறும்பு. அதே அழகு – இன்னும் பளபளப்பு அதிகார மிடுக்கும் கலந்த கம்பீரம் கூடி...

''என்ன அப்படிப் பார்க்கறே?''

அவள் சட்டென்று பார்வையை தழைத்துக் கொண்டாள்.

"நல்லா இருக்கிங்களா? உங்களை இந்தப் பதவியில பார்க்கும் போது சந்தோஷமா இருக்கு."

"தேங்க்ஸ். ஆனா, நான் உன்னை இங்கே எதிர்பார்க்கலை."

"ரெண்டு வருஷமா இங்க தான் ஒர்க் பண்ணறேன்."

"தெரியும். எல்லா ஸ்டாப் பத்தின பர்சனல் ரெக்கார்ட் எல்லாம் படிச்சுட்டேன். வெரி எபிஷியன்ட் ஒர்கர்னு பேர் வாங்கியிருக்கே. சந்தோஷம்."

அவன் சிரித்துக் கொண்டாள். அவன் முன்னே அவள் நிற்கும் ஒவ்வொரு நிமிடமும் அவள் அவளாக இல்லை. கடவுளே எதற்கு இந்த சோதனை? எதற்கு இந்த தண்டனை? எவன் நினைவிலிருந்து ஓடித் தப்ப முயன்றாளோ, அவனையே ஏன் எதிரே கொண்டு நிறுத்தி விட்டாய்?

"வெல், தென்றல் நான் உன்னைக் கூப்பிட்டது. ஒரு முக்கிய இன்பர்மேஷனுக்காக. கோயில்களைப் புனருத்தாரணம் - ஐ மீன், ரெனவேட் பண்ணும் போது, சரித்திர சான்றுகள் கலைந்து போயிட வாய்ப்புண்டு. அதைத் தவிர்க்கனும்.

ஒரு வெளிநாட்டு ஆராய்ச்சியாளர் காஞ்சி கோயில் ரெனவேஷன் போது சொல்லி இருக்கார். அந்த ஆதன்டிக் செய்தி வேணும்."

"இதோ, நிமிஷத்துல கொண்டு வரேன், சார்" எழுந்தாள்.

"பை த வே, லஞ்சுக்கு பாலகுமார் கூட வெளியே போயிருந்த போலிருக்கு."

அவன் குரலில் லேசான பொறாமை இருந்ததாய்ப்பட்டது அவளுக்கு. அவள் அதை ரசித்தாள்.

"யெஸ், சார். ஏன்?"

"ஒண்ணுமில்ல, கேட்டேன். தெரிஞ்ச பையனா?"



"இங்க ரெண்டு வருஷப் பழக்கம். மத்தப்படி எங்க ஊர்ப் பக்கம். தூரத்து உறவு."

"ஓ! சரி, நீ போ"

வெளியே வந்த போது அவளுக்கு ஏனோ சந்தோஷமாய் இருந்தது. அவன் பொறாமைப்படுவதாய் நினைப்பது தன் கற்பனை என்று ஒதுங்க முயன்றாள். கற்பனை வழக்கம் போல் சுகமாய் இருந்தது.

## 12

சீண்டு பேசும் போது
வாய்ப் பேச்சு எதுக்கடி?
என் மனக்குரல்
உனக்குக் கேட்கவில்லையா?
அது இருப்பதே உன்னிடம் தானேடி!

தியாகு ரவியின் வீட்டுக்குப் போன பொழுது ரவி மட்டுமே வீட்டில் இருந்தான். அவன் பெற்றோர் தஞ்சை சென்றிருந் தார்கள். அமர்க்களமாய் வரவேற்றான் ரவி.

"வாடா, வாவாவா. உட்காரு. வீட்ல கூட்டி வரலையா? எப்படி இருக்கே? அப்பாம்மா ஒரு கல்யாணத்துக்காக ஊருக்குப் போயிருக்காங்க... உன் குழந்தை எப்படி இருக்கு?"

சோபாவில் புதைந்த தியாகு, "வக்கணையா கூப்பிடுடா. இதுக்கொண்ணும் குறைச்சலில்லை. ரெண்டு வருஷத்துல எத்தனை தடவைடா என்னை நீ தொடர்பு கொண்டே?" என்று செல்லமாய் சீறினான்.

அவன் அருகே அமர்ந்து தோளைத் தட்டிய ரவி, "சாரிடா, ஊர் ஊராமாத்தினதுல, உன்னைத் தொடர்பு கொள்ள முடியலைடா.

பதவி, பொறுப்புனு பயங்கர டென்ஷன். இப்பத் தான் ஆசைப் பட்டபடி வேலைக்கு வந்திருக்கேன். இனிமேல் கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருக்கலாம்.''

தான் பேச வந்த விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்ற தயக்கத்தில் இருந்த தியாகு சட்டென்று பிடித்துக் கொண்டான்.

''அப்பமுன்னா, சீக்கிரமே கல்யாணச் சாப்பாடு போடப் போறே ரைட்?''

ஒரு நிமிடம் மௌனம் சாதித்த ரவி, பளிச்சென்று சொன்னான்.

''தென்றல் வீசின மனசுல வேற யாரையாவது நான் கொண்டு வச்சா, புயல் அடிக்கும்டா. என் வாழ்க்கை அமைதியா இருக்காது.''

''டேய்...'' அதற்கு மேல் வார்த்தை வராமல் நண்பனின் கரத்தைப் பற்றினான் தியாகு. ''அ... அப்பமுன்னா...''

''நீயும் தென்றலும் பேசினதைக் காலையில கேட்டேன். அதுக்கும் முன்னாடியே, அவ என்னை மணக்க மறுத்த விஷயம் எனக்குத் தெரியும்'' என்றவன் விளக்கிக் கூறினான்.

''மாமா அதான் எதுவும் சொல்ல முடியாது தவிக்கிறாரா?

மைகாட், மைகாட், தென்றல் ஏன் இப்படி இருக்கானு புரியலையேடா.

அதிகம் படிச்ச திமிறா. அவ அப்படிப்பட்ட பொண்ணும் இல்லையே.'' தியாகு புலம்பினான்.

''அவளுக்கு ஏனோ என்னைப் பிடிக்கலைப் போலிருக்கு. சரி விடு.''

''அவளுக்கு வேற யாராவத நல்ல பையனாப் பாருங்க.'' சொல்லும் போதே ரவியின் குரலில் வலி இருந்தது.



''அதுக்கும் அவ சம்மதிக்கறவளாத் தெரியலையே. அவ அம்மாவும் பாட்டியும் இதே புலம்பல்தான் எப்பவும். அவ அப்பா வெளியே சொல்ல முடியாமா மறுகறாரு என் மனைவியே இதனால பயங்கார அப்செட்பா.''

''கவலைப்படாதே. நான் பேசிப் பார்க்கறேன். அவ யாரைக் கல்யாணம் பண்ணிக்கறதாச் சொன்னாலும் நீங்க செஞ்சு வப்பீங்களா?''

''நல்ல பையனா இருந்தாச் சரி. ஆமாம். நீ பேசப் போறியா?''

''ம்''

தியாகு அவனை விநோதமாகப் பார்த்தான்.

''கொஞ்சம் டைம் கொடு. நான் உனக்கு நல்ல பதிலாச் சொல்றேன். சரி, இப்ப என்னோட டிபன் சாப்பிட வா...''

தன் காதல் ரணத்தை மனதில் புதைத்துக் கொண்டு, நண்பனுக்காக உற்சாகமாய் உதவ முன் வரும் அபூர்வ நண்பனை வியந்தபடி தியாகு டிபன் சாப்பிட எழுந்து போனான்.

சினிமா போல் பரிமாறும் ஆட்களும், வேலையாட்களும், காரும் வீடும் தியாகுவை அசத்தியது. ராணி போல் இங்கு கோலோச்ச வேண்டிய தென்றல், இப்படி முரட்டுப் பிடிவாதம் பிடித்து வாழ்வை பாழடித்துக் கொள்கிறாளே என்று அவள் மேல் கோபம் வந்தது. அவளை நினைத்தே நண்பன் தன் வாழ்வை வீணடித்துக் கொள்ளப் போகிறானே என்று ரவி மேல் பச்சாதாபம் எழுந்தது. அந்த ஆதங்கத்தில் ரவியிடம்,

''ரவி, நீயும் ஒரு நல்ல பெண்ணா பார்த்து கல்யாணம் செஞ்சுக்கோடா'' என்றான்.

''ஓ! கட்டாயமா'' என்று மெல்ல வடையை விழுங்கிய ரவி,

''அடுத்த ஜென்மத்துல'' என்றான்.

தியாகு இடிந்து போனான்.

# 13

என் இதயம்
திருடிய கள்ளி நீ!
உன் மைவிழியோ
பொய் பேசும்!
இருந்தும்,
பலர் சொல்கிறார்கள்
''அவள் நல்ல பெண்.''

ஒரு மாதம் அந்த வருட காலண்டரிலிருந்து உதிர்ந்தது. அலுவலகம் சுமுகமாய் போய்க் கொண்டிருந்தது. தென்றல்தான் திண்டாடிப் போனாள். ரவியை ஒரு நாள் பார்க்க முடியா விட்டால் கூட கண் பூத்துப் போனது. பார்த்தால் நெஞ்சு அடித்துக் கொண்டது. 'பாவி, என்னை மறுத்துவிட்டாயே' என்று மனம் துடித்தது. அவன் உயர் அதிகாரி என்பதால், தினமும் அவனுடன் பேச சந்தர்ப்பம் வந்ததில்லை. இருந்தும் அவன் அறையை அவள் கடக்கும் சமயம் கிடைக்கும் ஒரு பார்வைப் பரிமாறலுக்கு, வீதியுலா வரும் தெய்வத்திற்காக காத்திருக்கும் பக்தனாய் அவள் தவம் இருந்தாள். அழைத்து அவன் பேசி விட்டால், அன்று முழுதும் உல்லாசம்தான்!

தென்றலின் தவிப்பு இப்படி இருந்ததென்றால் –

ரவியின் வருகை குமாரை வேறு விதத்தில் பாதித்தது.

தென்றலை ரவி உரிமையாய் அழைத்துப் பேசும் விதம், இருவர் கண்களும் முக்கிய அலுவலக விஷயம் பேசும்போது கலந்து பிரியும் ஜாலம், அவள் திறமையை ஏற்கெனவே அறிந்தவனாய், அவளிடம் முக்கிய பொறுப்புக்களை அவன் ஒப்படைக்கும் சூழல் எல்லாமே அவன் வயிற்றில் புளி கரைத்தது.



இரண்டு வருடங்களாய் அவள் கடைக்கண் பார்வைக்கு அவன் தவமிருக்க, ஏதோ லஞ்ச் சாப்பிடும் அளவு அவள் வந்திருக்கும் நேரம், நேற்று வந்த ரவி அவளை அடித்துப் போய்விட்டால்! இப்படி அவன் தவித்துத் தண்ணீராய் உருகிய நேரம் தான்.

ரவியே அவனை அழைத்து, ''தென்றல் பத்தி என்ன நினைக்கறீங்க?'' என்றான்..

ஒரு நொடி ஆடிப் போனான் குமார். படிப்பு பதவி என்று தன்னைவிட மிக உயர்ந்த இடம் ரவி. 'குமார், தென்றலை விரும்பறேன். அவ என்னை விரும்பறாலானு கேட்டுச் சொல்லு' என்றால், நாய் மாதிரி ஓட வேண்டியவன். அதற்கு இடமளிப்பது முட்டாள் தனமல்லவா. பந்திக்கு முந்துபவனுக்கு நல்ல சோறு. காதலை முதலில் சொல்பவனுக்கே காதலி பரிசு. அதனால் பளிச்சென்று தயக்கமில்லாமல்.

''சார், தென்றல் ரொம்ப நல்ல பொண்ணு. எங்க ஊர் பக்கம் தான் சார். எனக்கு தூரத்து உறவு. கொஞ்ச நாள்ல நெருங்கின உறவா மாறப் போறவ. ஐ மீன், எங்க வீட்ல அவளைப் பொண்ணு கேட்கப் போறாங்க.'' என்றான் உற்சாகமாக.

ரவிக்கு இது புதுச் செய்தியாகவும், ஆச்சர்யமாகவும் இருந்தது.

''அப்படியா? ஆல் த பெஸ்ட்'' என்றான். தியாகுவிடம் தான் கொடுத்த வாக்கு சுலபத்தில் நிறைவேறுவது பற்றி ஒரு புறம் மகிழ்ச்சியும், காதலி கைவிட்டுப் போகும் வேதனை மறுபுறமும் உள்ளங்கையில் பனிக்கட்டியையும் புறங்கையில் நெருப்பையும் ஒரே சமயம் வைத்தது போல் அவனுக்கு தவிப்பாய் இருந்தது.

சற்றே தயங்கி, ''தென்றல் சம்மதிச்சுட்டாங்களா?'' என்றான்.

''கிட்டத்தட்ட சார். இந்த வாரம் அவங்ககிட்ட முடிவாப் பேசிடுவேன்.''

"குட் அவங்க சம்மதிச்ச உடனே சொல்லுங்க. அவங்க சகோதரி கணவர், என் நண்பன்தான். அவர்கிட்ட நானே பேசறேன்"

குமார் மகிழ்ந்து போனான். யாரைத் தன் போட்டியாளர் என்று நினைத்தானோ, அவனே முன் வந்து தன் திருமணம் பற்றி பேசுவது மகிழ்ச்சியைத் தந்தது.

சந்தோஷமாய், "சரி, சார்" என்றான்.

அவனை அனுப்பிவிட்டு கண் மூடி நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தான் ரவி. கண் முழுதும் தென்றல் வியாபித்தாள்.

'பெண்ணே, என்னை ஏன் மறுத்துவிட்டாய்?'

அவனுக்கு விடை கிடைக்கவில்லை.

## 14

உன்னை மறந்தேன்,
உறங்க மறந்தேன்,
உன் பித்தாய் -
உழைக்க மறந்தேன்.
என்னை மறந்தேன்,
என் அன்னை மறந்தேன்,
என்றடி நான்
உன்னை மறந்தேன்?

அடுத்து வந்த இரு தினங்களும் ரவிக்கு நரகமாய் அமைந்தது. தென்றலைப் பார்க்கும் ஒவ்வொரு நிமிடமும் அவன் மனதில் ஊசி குத்தலாக வலி எழுந்தது. கூடுமான வரை அவளைத் தவிர்த்து விட்டாலும், அலுவலக விஷயமாய் பேச வேண்டிய நிர்பந்தம் எழும் போதெல்லாம் தடுமாறிப் போனான். இவளை வேறொருவன் நேசிக்கிறான். கூடிய விரைவில் அவனுக்கு இவள் சொந்தமாகி விடப் போகிறாள். இவளை நினைப்பது தவறு என்று எத்தனை முறை மனதிற்குள் கூறிக்கொண்டாலும், பாழும் மனம் கேட்க மறுத்து அவதிப்பட்டது.



'தென்றல், ஒரு 'ம்' சொல்லியிருக்கக் கூடாதா? இத்தனை நேரம் நீ என்னுடையவளாய் இருந்திருப்பாயே! ஏன் என்னை மறுத்தாய் பெண்ணே!

பதில் கிடைக்காத இந்தக் கேள்வி அவனைக் குடைந்து கொண்டே இருந்தது.

அவனே இப்படித் தவித்துக் கொண்டிருந்த போது, அவன் அம்மா வேறு பிடித்துக் கொண்டு விட்டாள்.

"ரவி, எனக்கு நீ ஒரு நல்ல பதிலா சொல்லக் கூடாதாப்பா?"

"என்னம்மா?"

"உன் கல்யாண விஷயம் தான்."

"அதுக்கென்னம்மா இப்ப அவசரம்?"

"நல்ல கேட்டபோ. இப்ப செஞ்சுக்காம பின்ன எப்ப கல்யாணம் செஞ்சுப்பியாம்? அந்தத் தென்றல் வீட்டு மனுஷங்களும் கிணத்துல போட்ட கல்லா பதிலே சொல்லாம இருக்காங்க. உங்கப்பாவையும் அவங்ககிட்ட எதுவும் பேச வேண்டாம்னு சொல்றே. உனக்கு தென்றலைப் பிடிக்கலையா? வேற இடம் பார்க்கலாம்?"

அவனுக்கு அம்மா அவன் உயிர் ஜீவனையே கேட்பது போல் இருந்தது. என்ன பதில் சொல்வான். அவனுடைய எல்லாத் தவிப்பிலிருந்து அவனை விடுவிப்பது போல் அந்த ஒரு மாத டூர் ப்ரொக்ராம் வந்தது.

"அம்மா, ஒரு மாசம் டூர் போறேன். போயிட்டு வந்து உனக்கு பதில் சொல்றேன் சரியா?"

இந்த வரை மகன் இறங்கி வந்தானே என்ற சந்தோஷம் அம்மாவிற்கு.

## 15

பசிக்கு உணவு
மானத்துக்கு உடை –
நாட்டுக்குச் சுதந்திரம் –
நோய்க்கு மருந்து –
உயிருக்கு மூச்சு –
எனக்கு நீ!

ஒரு மாத டூர் முடியும் தருவாயில், தஞ்சையில் நான்கு நாட்கள் கேம்ப் அடித்தான் ரவி. அங்கு அவனுக்கு உதவியாய் சென்னையிலிருந்து குமார் வந்து சேர்ந்து கொண்டான்.

அன்றைய அலுவலை முடித்துக் கொண்டவர்கள், ஒரு நல்ல காப்பிக்காக காத்திருந்த நேரம், ரவி மெல்ல, ஆரம்பித்தான்.

''தென்றல் கிட்டப் பேசினீங்களா, குமார்?''

பாலகுமாரின் முகம் விழுந்து போனது தலையைக் குனிந்து கொண்டான்.

''தென்றல்... சம்மதிக்கலை சார்.'' சொல்லும்போதே அவன் குரல் கம்மியது.

ரவியின் முகம் இறுகியது. என்ன பெண் இவள்! ஏன் இப்படி இருக்கிறாள்? ஆண்களைத் தவிக்க விடும் ரகமாய்த் தெரியவில்லை. இருந்தும் ஏன் இப்படி?

''ஊருக்குப் போனவுடன் நான் அவங்ககிட்டப் பேசறேன்.''

''ரொம்ப தேங்க்ஸ் சார். இப்பக் கூட அவங்க லீவ் எடுத்துக்கிட்டு சொந்த ஊருக்குத்தான் போயிருக்காங்க.சார். பாட்டிக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லையாம்.''

''ஐ சீ.''

மறுநாள் ஞாயிறு

மழுவூரை நோக்கி ரவி கிளம்பி விட்டான்.



## 16

என் காதலி நடந்த
மண் இது
காற்றே கலைக்காதே!
என் காதலி தொட்ட
நீர் இது
ஆறே ஓடாதே!
என் காதலி நட்ட
செடி இது
பூவே உதிராதே!
என் காதலி அமர்ந்த
இதயம் இது
உயிரே பிரியாதே!

வலியும் வேதனையும் தாண்டி ஒரு மகிழ்ச்சி பூத்தது ரவியின் மனதில். வழக்கம் போல் பைக் எடுத்துக் கொண்டு கிளம்பியிருந்தான். முதல் முறை பார்த்து மயங்கிய பச்சை வயல்வெளிகளும் மரங்களும், கரை கட்டியது போல் நீள ஆறும் தென்றலின் நினைவும் அவனுள் விடிகாலை மலரும் பூவின் மணமாக எழுந்தது.

ஊருக்குள் நுழைந்து ஆற்றோரமாய் பயணிக்கும்போது, முதல் முதலாய்த் தென்றலைச் சந்தித்து வாங்கிக் கட்டிக் கொண்டது நினைவு வந்தது. வேகமாய் வந்தவன், படித்துறை அருகே வரும் போது வண்டியை நிதானமாக்கி பார்வையை ஆற்றோரம் செலுத்தினான். அவன் ஆசையாய் எதிர்பார்த்தது போலவே, தென்றல் ஆற்றோரம் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். தொலைவிலிருந்து பார்க்க வண்ணம் தீட்டப் படாத ஓவியமாய்த் தெரிந்தாள். வண்டியை அவசரமாய் நிறுத்தி விட்டு, வேகமாய் நடந்தான். அவளைப் பார்த்தவுடன் பொங்கிய

மகிழ்வில் ஒரு நொடி தான் குமார் சார்பில் பேச வந்திருப்பதையே மறந்தான். அப்படியே அவள் காலடி பற்றி, என்னை ஏற்க மாட்டாயா தென்றல் என்று கதற வேண்டும் போல் இருந்தது அவனுக்கு.

அருகே நிழல் சாய்வதைப் பார்த்து, திடுக்கிட்டுத் திரும்பிய தென்றல், அவனை அங்கே எதிர்பார்க்காமல் ஆச்சர்யப்பட்டாள்.

''அட, நீங்களா அவசரமாய் எழ முயன்றவளைத் தடுத்து, தானும் அருகேயே இடைவெளி விட்டு அமர்ந்து கொண்டான்.''

''உன்னைத் தான் பார்க்க வந்தேன், தென்றல்''

அவளுள் வழக்கம் போல் பட்டாம்பூச்சி சிறகடித்தது, இருந்தும் மனதை அடக்கினாள். பலூனை ஊதிவிட்டு குத்தூசியால் குத்திவிடுவது போல், ஏதாவது அல்ப காரணம் சொல்லி, வழக்கம் போல் தன் உற்சாகத்தைக் குலைத்து விடுவான் என்று நினைத்தாள். அதே போல், அவனும் ''நேரடியா விஷயத்துக்கு வரேன். குமாரை மறுத்துட்டியாமே உண்மையா?'' என்றான்.

இதுதானா? என்பது போல் அவனை முறைத்துப் பார்த்தவள், கோபமாக, ''ஆமாம். அதனால என்ன? அது என் இஷ்டம்'' என்றாள்.

இந்த பதில் ரவிக்கு சிற்றத்தை ஏற்படுத்தியது.

''என்ன பேசற நீ. அவன் மனசு படற பாடு உனக்கு என்ன தெரியும்?''

''எனக்கு அவனைப் பிடிக்கலையே''

''ஏன்?''

''இப்படிக் கேட்டா என்ன சொல்ல?'' 'உன்னை விரும்பறேன்டா பாவி'

''நான் சொல்லவா? நீ ஒரு சேடிஸ்ட். உன்னை விரும்பறவங்களை மறுத்து வேடிக்கைப் பார்க்கறதுல உனக்கு ஒரு சந்தோஷம்.''



''ரவி, யோசிச்சுப் பேசுங்க. அப்படி எத்தனை பேரை நான் ஏமாத்தினேனாம். எனக்காக அப்படி எத்தனை பேர் உருகுறாங்களாம்? ஏதாவது அபத்தமா பேசாதீங்க.''

''அபத்தம் இல்ல. உண்மை. உன்னால பாதிக்கப்பட்ட முதல் நபர் வேற யாருமில்ல – நான்தான். உயிரா உன்னை நேசிச்ச என்னை ரெண்டு வருஷமா கலங்கடிக்கறியே இதுக்குப் பேர் என்ன? என்னை நீ மறுக்க என்ன காரணம்?'' ஆவேசமாய் அவன் பேச, அவள் அப்படியே ஸ்தம்பித்துப் போனாள். ஒரு நிமிடம் அவளுக்கு வார்த்தைகளே வரவில்லை. என்ன, என்ன சொன்னான்? ரவி என்னை நேசித்தானா? உண்மையா? இது கனவா? ஆற்றோரம் அமர்ந்து புத்தகம் படித்தபடி தூங்கிப் போய் இன்பக் கனவு காண்கிறோனா? அதற்கு மேல் அவளை சிந்திக்க விடாமல் அவனே சீறினான்.

''பார், உன்கிட்ட பதிலே இல்லை.''

''எப்படி பதில் இருக்கும்? என்னை நீங்க தானே மறுத்தீங்க நீங்கதான் சேடிஸ்ட்''

''நானா?''

''ஆமாம், தியாகு மாமாகிட்ட இதே ஆற்றோரம், என்னைப் பிடிக்கலைனு நீங்க சொல்லலை?''

நெற்றியில பட்டென்று அடித்துக் கொண்டான் ரவி.

''அதை நீ கேட்டியா?''

''அன்பார்சுனேட்லி யெஸ்.''

''தியாகுகிட்ட நான் அப்படி சொன்னது உண்மைதான். உன்னை சந்திச்ச முதல் சந்தர்ப்பங்கள் உன்னை எனக்கு சரியா அடையாளம் காட்டலை. ஆனா, போகப் போக உன் அறிவு, படிப்பு, பாட்டு, அழகு எல்லாமே என்னைக் கட்டிப் போட்டது. தென்றல். ஐ'ஃபெல் மேட்லி இன் லவ் வித் யு.''

அவள் கண்கள் விரிந்தன. இதயம் படபடத்தது. உண்மையா, உண்மையா?

''அதை நீங்க எனக்கு வெளிப்படுத்தலையே.'' என்றாள் நிதானமான குரலில்.

''உண்மைதான். தியாகுகிட்ட நான் பேசினதை நீ கேட்டிருப் பேனு நான் நினைக்கலை. அதனால, நம்ம பெற்றோர் நம்மை இணைச்சுப் பேசினவுடனே நீ சம்மதிச்சுடுவேனு நான் நினைச்சேன். நீ மறுத்ததுக்கான காரணம் எனக்குப் புரியலை. சரி, நீ என்னை விரும்பலைனு நான் முடிவு செஞ்சு ஒதுங்கினேன்.''

''ஒதுங்க முடிஞ்சுதா?''

''முடிஞ்சிருந்தா, குமாரை சாக்கா வச்சு உன்னைப் பார்க்க வந்திருக்க மாட்டேன். குமாரை நீ மறுத்ததை என் உள் மனம் ரசிச்சிருக்காது, தென்றல்,'' மெல்ல அவள் கரம் பற்றினான் ரவி.

அவளுள் மீண்டும் பட்டாம்பூச்சிகள் சிறகடித்தன.

''இப்ப, குமார்கிட்ட போய் என்ன சொல்லப் போறீங்க?'' சீண்டினாள்.

''என் மனைவியை டாவடிக்காதேடா. அது தப்புனு.''

அவன் குறும்பாய் சொல்ல, அவள் ரசித்துச் சிரித்து நாணமாய் முகம் கவிழ்ந்தாள். அப்படியே தன் நெஞ்சில் சரித்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.

தென்றலும் சந்திரனும் இணைந்ததில் இயற்கையே சந்தோஷப்பட்டது போல் பூங்காற்றை மாலையாய் அனுப்பியது. பூங்காற்று அவர்களைத் தழுவி நின்றது.

(முற்றும்)